Registered as a News Paper in Sri Lanka

# தினக்கதிர்
வாரவெளியீடு

THINAKKATHIR WEEKLY

ஒளி - 02 - கதிர் - 94 22-07-2001 ஞாயிற்றுக்கிழமை பக்கங்கள் - 12 விலை - ரூபா 10/=

உங்களுக்கத் தேவையான சகலவிதமான அச்சுத் தேவைகளுக்கும் நாடவேண்டிய ஒரே இடம
ஈஸ்ரன் கிராபிக்ஸ்
திருமலை வீதி
மட்டக்களப்பு

# யாழ்.பல்கலைக்கழகம் நாளை திறக்கப்படும்

(யாழ் நிருபர்)

கடந்த 10 ஆம் திகதி மூடப்பட்ட யாழ்.பல்கலைக்கழகம் நாளை திங்கட்கிழமை முதல் மீளத் திறக்கப்படவுள்ளது.

இதற்கான அனுமதியை பல்கலைக்கழக மானிய ஆணைக் குழுவின் தலைவர் பேராசிரியர் ஆர்.ஆர்.பி. என்.மெண்டிஸ் தமக்கு வழங்கி இருப்பதாகத் துணை வேந்தர் பேராசிரியர் பொ.பால சுந்தரம்பிள்ளை தெரிவித்தார்.

திங்கட்கிழமை முதல் மாணவர்கள் வழமைபோல் தமது கல்விச் செயற்பாடுகளை மேற்கொள் ளலாம் என்றும் அவர் அறிவித்திருக்கிறார்.

யாழ். பல்கலைக்கழகத்தை மாணவரின் கல்விச் செயற்பாட்டுக்கு மீளத் திறப்பது தொடர்பாக பல்கலைக்கழக மானிய ஆணைக் குழுவின் தலைவர் பேராசிரியர் ஆர்.ஆர்.பி.என். மெண்டிஸுடன் தாம் தொடர்ந்து பேச்சுக்கள் நடத்தி வந்ததாகவும் -இந்தப் பேச்சுக்களின் விளைவாக நாளை திங்கட்கிழமை முதல் கல்விச் செயற்பாடுகளுக்காகப் பல்கலைக் கழகத்தைத் திறக்க அவர் அனுமதி வழங்கியுள்ளார் என்றும் - துணைவேந்தர் மேலும் தெரிவித்தார்.

உயர்கல்வி அமைச்சர் இந்திக குணவர்த்தனவின் பணிப்பின் கீழ் பல்கலைகழக மானிய ஆணைக் குழுவின் தலைவர் வழங்கிய உத்தரவின்படி துணைவேந்தர் விடுத்த அறிவித்தலை அடுத்து கடந்த 10 ஆம் திகதி முதல் பல்கலைக்கழகம் மூடப்பட்டிருப்பது குறிப்பிடத்தக்கது.

# சிவாஜிகணேசன் காலமானார்
# கட்டபொம்மனாக உணர்வூட்டியவர்

(சென்னை)



**கப்பலோட்டிய தமிழனாகவும், வீரபாண்டியக் கட்டபொம்மனாகவும் நடித்த தமிழ் மக்களுக்கு விடுதலை உணர்வூட்டிய நடிகர் திலகம் சிவாஜிகணேசன் நேற்று மாலை தனது 74வது வயதில் காலமானார்**

நூற்றுக்கு மேற்பட்ட தமிழ்ப்படங்களில் கதாநாயகனாக பல்வேறு சரித்திர, சமயப்ப டங்களிலும் நடித்த நடிகர் திலகம் என்று பட்டம் பெற்ற சிவாஜி 'செவாலியே' பட்டமும் பிரான்ஸ் நாட்டின் பட்டமும் பெற்றவர்.

சிலவருடங்களுக்கு முன் ஈரல் நோயினால் பாதிக்கப்பட்ட சிவாஜி மலேசியாவில் சிகிச்சை பெற்று குணமடைந்திருந்தார்.

சாகும் வரை நடித்துக் கொண்டே இருப்பேன் என்று சொன்னபடி நடித்து வந்த சிவாஜி இருவாரங்களுக்கு முன் ஏற்பட்ட நெஞ்சுவலி காரணமாக அப்பலோ மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்றுவந்தார். இங்கேயே அவர் நேற்று மாலை காலமானார்.

சிவாஜியின் மூத்தமகன் ராம் குமார் முதலில்

(12ம் பக்கம் பார்க்க)

## சர்வஜன வாக்கொடுப்புக்கான நிதியை பெற நாடாளுமன்றம் கூடும்

(கொழும்பு)

அடுத்தமாதம் 21ஆம் திகதி நடத்தப்படவுள்ள சர்வஜன வாக்கெடுப்புக்குத் தேவையான நிதியை குறைநிரப்புப் பிரேரணை மூலம் பெறுவதற்காக நாடாளுமன்றத்தைக் கூட்டவேண்டிய கட்டாயம் அரசுக்கு ஏற்பட்டிருப்தாகக் கொழும்பு அரசியல் வட்டாரங்கள் தெரிவித்தன. சர்வஜன வாக்கெடுப்பை நடத்துவதற்கு 60 கோடி ரூபா செலவாகும் என மதிப்பிடப்பட்டுள்ளது. இந்தளவு

(12ம் பக்கம் பார்க்க)

## மட்டக்களப்பு கல்லடியில் பொலிஸ் கான்ஸ்டபிள் சுட்டுக்கொலை

(இரா.துரைரத்தினம்)

மட்டக்களப்பு கல்லடி சிவானந்தா வித்தியாலயத்திற்கு அருகில் நேற்று சனிக்கிழமை நண்பகல் 12மணியளவில் பொலிஸார் ஒருவர் இனந்தெரியாத ஆயுதபாணிகளால் சுட்டுக்கொல்லப்பட்டார்.

கொல்லப்பட்டவர் மஞ்சந்தொடுவாய் பொலிஸ் காவல்

(12ம் பக்கம் பார்க்க)

## ஆர்ப்பாட்டத்தைக்கலைக்க துப்பாக்கிக் குண்டு, பாவித்ததாக தெரிவிப்பு

(கொழும்பு)

கொழும்பில் வெள்ளிக்கிழமை ஆர்ப்பாட்டக்காரர்களைக் கலைப்பதற்கு கண்ணீர்ப்புகை பிரயோகமும் ரப்பர் குண்டுவீச்சும் மாத்திரமே நடத்தியதாகப் பொலிசார் முன்பு தெரிவித் திருந்த போதிலும் கொலையுண்டவர்கள் இருவரும் துப்பாக்கி குண்டு துளைத்து இறந்துள்ளார்கள் என்று சடலத்தை வைத்திய பரிசோதனை செய்த சட்டவைத்திய அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். அவர்களில் ஒருவரின் கழுத்தில் சுடப்பட்டுள்ளது. பொலிஸ் அதிகாரி ஒருவர் துப்பாக்கி பாவிக்கப்பட்டதை ஒப்புக்கொண்டிருப்பதுடன் சுடுவதற்கான அனுமதி எங்கிருந்து வந்தது என்பதை கூறமறுத்துள்ளார். ஒரு கொலை தொடர்பாக மூன்று பொலீஸ் உத்தியோகத்தர்களை

(12ம் பக்கம் பார்க்க)

## சர்வஜன வாக்கெடுப்புக்கு
### 17 கட்சி எதிர்ப்பு, 16 ஆதரவு, 13 நடுநிலை

(கொழும்பு)

சர்வஜன வாக்கெடுப்பு தொடர்பான தமது நிலைப்பாட்டை அரசியல் கட்சிகள் தேர்தல் ஆணையாளருக்கு அறிவித்துள்ளதாகத் தேர்தல் வாக்கெடுப்புக்கு ஆதரவாகப் பதினாறு கட்சிகளும், எதிராக பதினேழு கட்சிகளும் தமது முடிவை அறிவித்துள்ளன. அதே வேளை சில கட்சிகள் எந்த விதமான முடிவையும் வெளியிடவில்லை. அவ்வாறான பதின்மூன்று கட்சிகளைத் தேர்தல் ஆணையாள்

(12ம் பக்கம் பார்க்க)

உடனடி வேலைவாய்ப்பு

முஸ்லீம் முஸ்லிம் அல்லாத அனைத்துப் பெண்களுக்கும் முற்றிலும் இலவசமான சேவை

சவூதி ஆரேபிய பிரபல ஆஸ்பத்திரி ஒன்றுக்கு பெண் சுத்திகரிப்பாளர்- 21 - 38 வயதுக்கிடைப்பட்டவர் களுக்கு

பயிற்சி அவசியமில்லை
மூன்றே நாளில் சவூதி பயணம்

*ALUMINIUM FABRICATORS
*ALUMINIUM INSTALLER
*ALUMINIUM FITTER
*TILE PIXER

மேலதிக விபரங்களுக்கு:
நியூ பா:.ஹீம் என்டர்பிரைஸஸ்
283, 1,2,3ம் மாடி,
பிரதான வீதி,
கொழும்பு - 11.
அனு.இல.736

கிழக்கு மாகாண மக்களுக்கு
பா:.ஹீம் என்டர்பிரைசஸ்,
152/1,152/2 பிரதான வீதி,
காத்தான்குடி.
அனுமதி இல.1755
advt

## பிரி. ஆயுதங்கள் இலங்கை வருவது அதிகரிப்புக்கு கவலை!

இலங்கைக்கும் நேபாளத்திற்கும் பிரிட்டனில் இருந்து ஏற்றுமதி செய்யப்படும் ஆயுதங்களின் தொகை அதிகரித்து வருவது பற்றி ஆயுத ஏற்றமதி ஐக்கிய கண்காணிப்பு அமைப்பு ஒன்று கவலை தெரிவித்திருக்கின்றது.

எதிர்வரும் 12ம் திகதி நடைபெறவிருக்கும் 5ம் தர மாணவர்களுக்கான,
புலமைப்பரிசில் கல்விக் கருத்தரங்கு — 2001

எதிர்வரும் 01-08-2001 இல் இருந்து ஆரம்பமாகவிருக்கும் கருத்தரங்கில், விரிவுரை வளங்குகிறார்கள். "இரு முன்னணி" கொழும்பு, கண்டி, பாணந்துறை, நுவரெலியா, மாத்தளை, கம்பளை, ஹட்டன் புகழ் ஆசான்கள் மட்டக்களப்பு - அம்பாறை மாவட்டங்களுக்கு முதல் தடவையாக புலமைப்பரிசில் கருத்தரங்கில் காலடி எடுத்து வைக்கிறார்கள்.

| | | | |
|---|---|---|---|
| களுவாஞ்சிகுடியில் | 01-08-2001 | மட்டக்களப்பில் | 02-08-2001 |
| கல்முனையில் | 03-08-2001 | அக்கரைப்பற்றில் | 04-08-2001 |
| காரைதீவில் | 05-08-2001 | தம்பிலுவில் | 06-08-2001 |
| ஏறாவூரில் | 07-08-2001 | | |

தொடர்புகளுக்கும், பங்குபற்றுபவர்கள் பற்றிய விபரங்களை பாடசாலை அதிபர்கள் அனுப்புவதற்கும்

சா.ரவீந்திரன்,
கடற்கரை வீதி,
களுவாஞ்சிகுடி

அல்லது
தொலைபேசியில்,
ச.சுரேஸ்குமார்,
065-50229
advt

எங்கள் ஏரம்பம்

ஐ.தே.க தலைவர் பதவியில் இருந்து ரணிலை நீக்க வேண்டும்
அமைச்சர் மங்கள சமரவீர



அப்படியெண்டா
உங்களையும் ஐ.தே.க
தலைவராக வைக்க....



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

**தினக்கதிர்**
த.பெ. இல: 06
155, திருமலை வீதி,
மட்டக்களப்பு.
தொ. பே. இல : 065 - 22554
E-mail :- tkathir@snet.lk

## யாழ்.பல்கலைக்கழகம்

"புலிகளின் குகை "என்று நாமமிட்டு மூடப்பட்ட யாழ் பல்கலைக்கழகம் நாளை திங்கட்கிழமை திறக்கப்படவிருப்பதாக நேற்று அறிவிக்கப்பட்டிருக்கிறது.

குகைக்குள்ளிருந்து புலிகள் வெளியேறிவிட்டனவா அல்லது வெளி யேற்றப்பட்டனவாஎன்பது அறிவிக்கப்படவில்லை.

பல்கலைக்கழக துணைவேந்தருக்கோ பல்கலைக்கழக அதிகாரிகளுக்கோ குகைக்குள் புலிகள் இருந்ததாகத் தெரியவில்லை.

துணை வேந்தரை கலந்தாலோசிக்காமலே பல்கலைக்கழகம் மூடப்பட்டது. அதை முடுவதற்கு சாட்டாக கிருஷ்ணசாமி திவ்வியன் என்ற விஞ்ஞான பீட இறுதியாண்டு மாணவனின் கைது இடம் பெற்றது.

கிருஷ்ணசாமி திவ்வியன் கைது செய்யப்பட்டுக் காரணமின்றி தடுத்து வைக்கப்பட்டான்.வடக்கிலும் கிழக்கிலும் கைது செய்யப்படும் இளைஞர்கள் மீதும் சுட்டுக் கொல்லப்படும் இளைஞர்கள் மீதும் வழமையாக சுமத்தப் படும் குற்றச்சாட்டுக்கள் இவன் மீதும் சுமர்த்தப்பட்டடுள்ளன.

திவ்வியனை விடுதலை செய் அல்லது நீதிமன்றத்தில் நிறுத்தி விசாரணை செய் என்று யாழ் பல்கலைக்கழக மாணவர்கள் மட்டுமல்ல வடக்கு கிழக்கு மாணவர் சமுதாயமே கல்வியை நிறுத்திவிட்டு ஒன்றிணைந்து ஆர்ப்பாட்டம் செய்து குரல் கொடுத்தது.

அரசியல் வாதிகளும் பொது அமைப்புக்களும் ஆசிரியர்களும் பொது மக்களும் மாணவர்களுடன் இணைந்து திவ்வியனை விடுதலை செய் அல்லது நீதிமன்றத்தில் நிறுத்தி விசாரணை செய் என்று ஓங்கிக் குரல் எழுப்பினர்.

ஒன்றுபட்ட மாணவர்களினதும் மக்களினதும் குரலுக்கு இரும்புக்கரங்கள் இளக வேண்டியதாயிற்று. நியாயம் வென்றது.

நீதிமன்றத்தில் திவ்வியன் தம்மீது சுமத்தப்பட்ட குற்றச்சாட்டுக்களை மறுத்ததுடன் மறுக்கப்பட்ட சித்திரவதைகள் தாம் அனுபவித்தது உண்மை என்றும் தெரிவித்திருக் கிறான்.

வழக்கு நீதிமன்றத்திலிருக்கிறது. நீதி கிடைக்கப் பிரார்த்திப்போம்.

"எண்ணித்துணிக கருமம்
துணிந்தபின்
எண்ணுவமென்பது இழுக்கு"

-திருக்குறள்-

# டி.எஸ்.முதல் — டட்லி வரை 3



அகில இலங்கைத் தமிழ்க்காங்கிரஸ் தலைவர் ஜி.ஜி.பொன்னம்பலம் பிரதமர் டி.எஸ்.சேனநாயகாவிடமிருந்து என்ன வாக்குறுதியைப் பெற்று அவரது அமைச்சரவையில் சேர்ந்தாரோ தெரியாது. அவர் அமைச்சரவையில் சேர்ந்ததால் காங்கிரஸிலிருந்து வெளியேறிய எஸ்.ஜே.வி.செல்வநாயகம் வன்னியசிங்கம், டாக்டர் நாகநாதன், டாக்டர் பரமநாயகம், சட்டக்கல்லூரி மாணவன் அ.அமிர்தலிங்கம் போன்றவர்கள் கூட்டம் கூடி தாங்கள் அடுத்து என்ன நடவடிக்கை எடுப்பதென்பது பற்றி ஆலோசித்தனர்.

இதுவரை காலமும் தமிழ்த்தலைவர்களும் தமிழ் இனமும் சிங்களத்தலைவர்களை நம்பிக்கெட்டது போதும். இனியும் அவர்களின் வாக்குறுதிகளை நம்பிக் கெடக்கூடாது என்று இவர்கள் உறுதி செய்து கொண்டனர்.

மலையகத்தமிழ் மக்களின் குடியுரிமை வாக்குரிமை பறிக்கப்பட்டதைத் தொடர்ந்து இந்நாட்டின் தமிழ் மக்களின் எதிர்காலம் எப்படி இருக்கப்போகிறதென்பது பற்றியும் இவர்கள் ஆராய்ந்தனர். எதிர்காலத்தில் தமிழ் மக்களின் மொழி உரிமைக்கு ஆபத்தேற்படலாம் என்றும் அச்சம் தெரிவிக்கப்பட்டது. இன்று இந்திய வம்சாவழித் தோட்டத்தொழிலாளர்களுக்கு ஏற்பட்டுள்ள உரிமைகள் பறிப்பு நாளை இலங்கைத் தமிழரின் மொழி உரிமை பறிக்கப்படும் போது தான் தமிழர்கள் உணர்ந்து கொள்வார்கள் என்று செல்வநாயகம் எடுத்துக் கூறியதுடன் மொழி உரிமை மட்டுமல்ல தமிழ் மக்களின் தாயக மண் படிப்படியாகப் பறிக்கப்பட்டு வருகிறதென்பதையும் எடுத்துச் சொன்னார்.



இந்த நிலையில் தமிழ் மொழிக்குச் சம அந்தஸ்து வேண்டுமென்று கோருவதிலும் பாராளுமன்றத்தில் தமிழ் மக்களின் பிரதிநிதித்துவத்தை அதிகரிக்க வேண்டுமென்று கேட்பதிலும் அர்த்தமில்லையென்றும் கருத்துத் தெரிவிக்கப்பட்டது.

### இணைப்பாட்சி என்ற சமஷ்டி

சிங்களவர்களுக்கு இருக்கும் அதே உரிமையுடன் தமிழ் மக்கள் தமது தாயக மண்ணைப்பாதுகாப்பதுடன் தங்கள் மொழி, கலாசாரம் ஆகியவற்றைப் பாதுகாத்துப் பேணவும் சமஷ்டி ஆட்சி அமைப்பென்ற இணைப்பாட்சி முறையை இலங்கையில் ஏற்படுத்த வேண்டும். இதற்காக இதையே நமது கொள்கையாகக் கொண்டு புதிய அரசியல் கட்சியை உருவாக்குவதென்று தீர்மானிக்கப்பட்டது. கட்சியின் கொள்கை சமஷ்டி என்ற இணைப்பாட்சியை ஏற்படுத்துவது. இது அமைந்ததும் அது தமிழ் அரசாக தமிழ்ப்பகுதி விளங்கும் என்றும் விளக்கம் தரப்பட்டது.

இதுவே இலங்கைத்ததமிழ் அரசுக்கட்சி உதயமாவதற்குக் காரணமானது. இதை சமஷ்டிக்கட்சி (FEDERAL PARTY) என்று ஆங்கிலத்தில் அழைத்தனர்.

இலங்கைத்தமிழ் அரசுக்கட்சி இலங்கையில் இணைப்பாட்சி அமைப்பை ஏற்படுத்துவதற்கு பாராளுமன்றத்தினுள்ளேயும் வெளியேயும் ஜனநாயக முறையிலும் சாத்வீக வழியிலும் போராடுவதென்றும் தீர்மானிக்கப்பட்டது.

இலங்கைத்தமிழ் அரசுக்கட்சியின் முதல் தலைவராக எஸ்.ஜே.வி.செல்வநாயகம் தெரிவு

**எஸ்.எம்.ஜி**

செய்யப்பட்டார்.

இலங்கைத்தமிழ் அரசுக்கட்சி இலங்கையில் இணைப்பாட்சி முறையை ஏற்படுத்த வேண்டுமென்று பிரசாரம் செய்யத் தொடங்கியது.

இந்தியாவில் ஜின்னா,இலங்கையில் பொன்னா" என்றும் "தமிழன் என்று சொல்லடா,. தலை நிமிர்ந்து நில்லடா" என்றும் பொதுத் தேர்தல் காலத்தில் வீசிய ஜி.ஜி.அலை அவர் தேர்தல் காலத்தில் கடுமையாகத் திட்டித் தீர்த்த டி.எஸ்.சேனநாயகாவுடன் அமைச்சரவையில் சேர்ந்த பின்பும் கூட பெரும்பாலான மக்கள் மத்தியிலிருந்து ஓயவில்லை.

இதனால் இலங்கைத்தமிழ் அரசுக்கட்சி சமஷ்டி அமைப்புக்காகப் பிரசாரம் செய்வதற்கும் தமிழ் மக்கள் மத்தியில் நாட்டின் அரசியல் நிலையை எடுத்துக் கூறி விழிப்புணர்வு ஏற்படுத்துவதற்கும் ஆலோசனைக் கூட்டங்கள் கூட வைக்க முடியாமல் ஜி.ஜி.அலை வீசிக் கொண்டிருந்தது.

தமிழரசுக்கட்சியின் கூட்டங்களில் சொல்லடிக்குப்பதிலாக கல்லடிகளே அதிகரித்தன.

இந்நிலையில் காலைவேளையில் காலி முகத்திடலில் குதிரைச்சவாரிக்குச் செல்லும் பிரமுகர்களில் பிரதமர் டி. எஸ்.சேனநாயகாவும் கடற்றொழில் கைத்தொழில் அமைச்சர் ஜி.ஜி.பொன்னம்பலமும் இருவர்.

1952ம் ஆண்டு மார்ச் மாதத்தில் இருவரும் காலிமுகத்திடலில் குதிரைச்சவாரி செய்து கொண்டிருக்கையில் டி.எஸ்.சேனநாயகா குதிரையிலிருந்து தவறி விழுந்து விட்டார்.

உடனடியாக மருத்துவமனைக்கு கொண்டு செல்லப்பட்டுச் சிகிச்சையளித்த போதும் லண்டனிலிருந்து பிரிட்டிஷ் பிரதமர் சேர்.வின்ஸன் சேர்ச்சில் "ஜெட்டை அனுப்பு" (ஜெட் விமானத்தில் வைத்திய நிபுணர்களை அனுப்பும் படி) என்று உத்தரவிட்டு நிபுணர்கள் வந்த போதிலும் டி.எஸ்.ஸை காப்பாற்ற முடியவில்லை.

சுதந்திர இலங்கையின் முதலாவது பிரதம மந்திரி அதி கௌரவ டொன் ஸ்ரீபன் சேனநாயகா காலமானார்.

### டி.எஸ். மரணத்துடன் வாக்குறுதிகள் மாண்டன

டி.எஸ்.தமிழ்த்தலைவர்களுக்குக் கொடுத்த வாக்குறுதிகளும் காலமாகி அவர் உடல் சாம்பலாய்ப்போன மாதிரி வாக்குறுதிகளும் எரிந்து சாம்பலாய்ப் போயின.

இலங்கை சுதந்திரம் பெறுவதற்கு தமிழ்த்தலைவர்களுக்கு அவர் கொடுத்த வாக்குறுதிகள் அவருடன் கரைந்து போயின, சுதந்திரம் சிங்களவர்களுக்கு மட்டுமே உரித்தானது.

டி.எஸ்.சேனநாயகா காலமானதும் அடுத்த பிரதமரைத் தெரிவு செய்வதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன.

ஐக்கிய தேசியக்கட்சியில் வாரிசு அரசியல் வரக் கூடுமென்பதை முன்னரே முகர்ந்து கொண்ட எஸ்.டபிள்யு.ஆர்.டி.பண்டாரநாயகா அதிலிருந்து வெளியேறி புதிய அமைப்பொன்றை உருவாக்கியிருந்தார். அடுத்ததாக சேர்.ஜோன்



கொத்தலாவலைதான பிரதமர் பதவி ஏற்க வேண்டும்.

இதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டிருந்த போது வெளிநாடு சென்றிருந்த இலங்கையின் கவர்ணர் சோல்பரிப்பிரபு அங்கிருந்தபடியே பதில் ஆளுநராகக் கடமையாற்றிக் கொண்டிருந்த பிரதம நீதியரசருக்கு அவசர செய்தியொன்றை அனுப்பியிருந்தார்

"புதிய பிரதம மந்திரிக்கு பதவிப்பிரமாணம் செய்து வைப்பதில் அவசரம் வேண்டாமென்றும் புதிய பிரதம மந்திரி யார் என்பதை முடிவு செய்யலாமென்றும் சோல்பரி பிரபு அந்தச் செய்தியில் தெரிவித்திருந்தார்.

தமது வெளிநாட்டுப்பயணத்தை முடித்துக் கொண்டு அவசரமாக நாடு திரும்பிய ஆளுநர் சோல்பரிப்பிரபு புதிய பிரதமராகப் பதவியேற்பதற்குத் தமக்கு அழைப்பு வரும் என்று எதிர்பார்த்திருந்த சேர்.ஜோன் கொத்தலாவலையை அழைக்கவில்லை.

அமைச்சர்கள் பலரையும் அழைத்து ஆலோசனை நடத்திய சோல்பரிப்பிரபு மறைந்த பிரதமர் டி.எஸ்.இன் விருப்பமும் கோரிக்கையும் காணி விவசாய அமைச்சரும் அவரது மகனுமான டட்லி சேனநாயகாவையே தனக்குப் பின் பிரதமராக பதவிப்பிரமாணம் செய்து வைக்க வேண்டுமென்பது தான் என்று சோல்பரிப்பிரபு அமைச்சர்களிடம் தெரிவித்து அப்படியே செய்தார்.

சேர் ஜோன் வெகுண்டெழுந்தார். "பிரதமர் பதவிப்போட்டி எனறு ஒரு சிறு கைநூலும் அச்சமயத்தில் வெளி வந்தது.

சேர் ஜோன் பிரதம மந்திரியாகப் பதவியேற்பதை சேர்.லலிதா ராஜபக்சவும், ஜி.ஜி.பொன்னம்பலமும் கடுமையாக எதிர்த்தார்கள் என்ற கதையும் வெளிவந்தது.

(வளரும்........)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


துரை - மேகநாதன்

# "ஆடிக்கறக்கிற மாட்டை ஆடிக் கறக்க" உணர்த்திய ஆடிக் கலவரம்

*"ஆடிப்பிறப்புக்கு நாளை விடுதலை*
*ஆனந்தம் ஆனந்தம் தோழர்களே!*
*கூடிப் பனங்கட்டிக் கூழும் குடிக்கலாம்*
*கொழுக்கட்டை தின்னலாம் தோழர்களே!"*

ஆடிப்பிறப்பின் தமிழ் சமூகவியல் விழுமியத்தைப் போற்றும் "தங்கத்தாத்தா" நவாலியூர் சோமசுந்தரப் புலவரின் இப்பாடல், 1983 ஆடிக்குப் பின் ஈழத்தமிழரின் மனங்களில் மகிழ்வு நிலையை மாற்றி பயப்பிராந்தியைத் தோற்றுவிக்கக் காரணமான "ஆடிக்கலவரம்" (கறுப்பு ஜுலை) பௌத்த சிங்கள பேரினவாதத்தால் கட்டவிழ்ந்து விடப்பட்டு 18 வருடங்கள் ஆகும் நிலையில், அதுபற்றிய நினைவூட்டற் குறிப்பாக இது அமைகிறது.

**பாண மக்களின் கருத்துக்களைப் பற்றி கவலையில்லை. நாம் அவை பற்றி இப்பொழுது சிந்திப்பதற்கில்லை. அவர்களது உயிர்கள் பற்றியோ, எம்மைப்பற்றி அவர்களது கருத்தைப்பற்றியோ நாம் சிந்திப்பதில்லை"** என்று ஸ்ரீலங்காவின் அதிபரான ஜுனியர் றிச்சட் ஜெயவர்த்தன **"DAILY TELEGRAPH"** என்ற பிரித்தானிய பத்திரிகையின் நிருபர் "க்றேம் வாட்"க்கு வழங்கிய நேர்காணல் இனவழிப்புக்கான முன்னறிவிப்பாகவே



1983 "கறுப்பு ஜுலை"யில் ஸ்ரீலங்காவின் தலைநகரில் பேரினவாதக் காடையர்களால் உயிரோடு எரியூட்டப்படுமுன் தமிழ் இளைஞர் ஒருவர் நிர்வாணமாக;

அமைந்தது.

1983 ஜுலை 23இல் நிகழ்ந்த கண்ணி வெடித் தாக்குதல் யாழ். குடாநாட்டில் ஸ்ரீலங்கா படைத்துறையினரின் அசைவியக்கத்தையே கேள்விக்குறியாக்கியதன் உளவியல் பாதிப்பை "நேர்வழியில்" சரி செய்யமுடியாத கோழைத்தனத்தாலேயே, தாக்குதல்களை நிராயுதபாணிகளான ஈழத் தமிழர்கள் மீது பௌத்த சிங்களப் பேரினவாதம் கட்டவிழ்ந்து விட்டிருந்தது. 1983.07.23க்கு மறுநாள் தாக்குதல் நடந்த அயற்பிரதேச மக்களிலும், மானிப்பாயில் பேருந்தால் இறக்கப்பட்ட பயணிகளிலும் ஆக 41பேர் சுட்டுக் கொல்லப் பட்டனர். யாழ்.பல்கலைக்கழகப் பேராசிரியர் செல்வநாயகமும், **"MERJE"** (இனங்களுக்கிடையே நீதிக்கும் சமத்துவத்துக்குமான இயக்கம்) உறுப்பினரும் ஊடகவியலாளரு மான விமலதாசனும் இவர்களில் குறிப்பிடத்தக்கவர்களாவர்.

கண்ணி வெடித் தாக்குதல் பற்றிய செய்தி ஒருநாள் கழித்தே கொழும்புப் பத்திரிகைகளில் இடம் பெற்றது. பலியான 13 படையினரதும் இறுதிக் கிரியைகள் வழமைக்கு மாறாக பொரளை கனத்தையில் ஒழுங்கு செய்யப்பட்டிருந்த நிலையில், அதையடுத்து, பொரளையில் மூண்ட "கறுப்பு ஜுலைத்தீ" கொழும்பின் இதர பகுதிகளுக்கும் மலையகத்துக்கும் பரவி அரச தகவலின்படி 200-300 தமிழர்கள் பலியாகினர். (ஜுலை 23 - ஆகஸ்ட் 10 வரை 316 தமிழர்கள் பலி) (உத்தியோகபூர்வமற்ற தகவல்களின் படி இது 2000க்கும் மேலாகும், வார முடிவில் 800,000 மலையகத் தமிழர்கள் அடங்கலாக 1,400,000 தமிழர்கள் ஏதிலிகளாகி ஏதிலி தங்ககங்களில் அடைக்கலமடைந்தனர்.

இந்நிலையில் அரச ஊடகங்களினூடு உரை நிகழ்த்திய நிறைவேற்று அதிகார ஜனாதிபதி ஜே.ஆர். பாதிப்புற்ற தமிழ் மக்களுக்கு ஓரிரு ஆறுதல் வார்த்தையேனும் கூறாது **"போர் என்றால் போர; சமாதானம் என்றால் சமாதானம"** என்று கூறி எரியும் நெருப்பிற்கு எண்ணெய் வார்த்ததுடன் **"இந்நாட்டின் பெரும்பான்மைச் சிங்கள மக்களின் பொறுமைக்கும் சகிப்புத் தன்மைக்கும் ஓர் எல்லையுண்டு"** என்று வியாக்கியானம் அளித்து, தமிழர்களுக்கெதிரான இனவழிப்பை ஆதரித்து ஊக்குவித்துமிருந்தார்.

கொழும்பில் நடைபெற்ற இனவழிப்பு நடவடிக்கைகளுக்கு கைத்தொழில் அமைச்சர் சிறில் மத்தியுவும், ஐ.தே.க.சார்புத் தொழிற் சங்கமான "ஜாதிக சேவக சங்கம்" **(J.S.S)** இன் பொதுச் செயலாளரும் பிரதான சூத்திரதாரிகளாக இனங்காணப்பட்டனர். (அரசாங்கத்தினால் அவர்கள் கண்டு கொள்ளப்பட்டிருக்கவில்லை) புறக்கோட்டையில் 442 தமிழ் கடைகள் அழிக்கப்பட்டு கொலைகளும் நடக்க அப்போதைய பிரதமரான ஆர்.பிரேமதாசவின் வலது கையான "அலோசியஸ்" முதலாளியின் மகன் முன்னின்றிருந்தாராம். இலங்கைப் போக்குவரத்துச் சபை, பெற்றோலியக் கூட்டுத்தாபனம் என்பவற்றினதும் வாகனங்கள் சிங்களக் காடையர்களது பணிகளை இலகுவாக்கின. மலையக வன்முறைகளுக்கு நுவரெலியப் பாராளுமன்ற உறுப்பினரும், காணி, காணி அபிவிருத்தி அமைச்சருமான காமினி திஸநாயக்க நேரடியாகப் பிரசன்னமாகி வழி நடத்தியிருந்தார்.

வடக்கு கிழக்குத் தமிழர் தாயக ஆள்புலத்துக்கு வெளியே குறிப்பாகத் **"தென் இலங்கையில் வாழும் தமிழர்கள் வெறும் பணயக் கைதிகள் தான"** என முன்பு பல இடங்களிலும் கோப்பாய் பா.உ.சி.கதிரவேலுப்பிள்ளை கூறியது 1983 ஆடியிலும் ஆழமாக வெளிப்பட்டது. ஈழத்தமிழர்களின் நீதியான அரசியல் அபிலாஷைக் கோரிக்கைகளை முளையிலே கிள்ளியெறியும் சிங்கள ஆட்சியின் கபட நோக்கம் 1983.07.30 இல் பிரதமரான ரணசிங்க பிரேமதாஸ தனது வானொலியுரையில் **"எங்கள் அரசாங்கத்தி னால் நாட்டைப் பாதுகாக்க முடியும். இன்னொரு அரசை அமைக்கவோ, நாட்டைப் பிளவு படுத்தவோ இதன்பிறகு யாரும் பேசமுடியாது. அவ்வாறு செய்வோருக்குக் குடியியல் உரிமை பறிக்கப்படும். அவ்வாறு செய்யும் அமைப்புக்களுக்குத் தடை விதிக்கப்படும"** என்று பலத்த எச்சரிக்கையாக வெளிப்படுத்தினார்.

அரசு சார்பு ஏரிக்கரைப் பத்திரிகையான "தினமின" பௌத்த சிங்கள பேரினவாத வெறியைக் கிளப்பி "கறுப்பு ஜுலை" யில் பெரும் பங்கு வகித்தது. **"சிங்களவர் தமக்கென்று வேறு ஒரு நாடு இல்லை என்பதை மறந்துவிடக் கூடாது. நாடு பிளவுபடுவதை அனுமதிக்க முடியாது. கடைசிச் சிங்களவர் இருக்கும் வரை இதனை எதிர்ப்போம"** என்று 1983 ஆகஸ்ட் 4 இல் லலித் அத்துலத் முதலி அவர்கள் இனவாதம் கக்கியிருந்தார்.

மேற்படித் தமிழினப் படுகொலையை நியாயப்படுத்தும் வகையிலே 1983.08.04 ஆம் திகதிய "தினமின" வில் அமைச்சர் காமினி திஸநாயக்க அவர்கள் **"பல அரச சொத்துக்களை இராணுவத்தினரை, கட்சியினரை, பொலிஸாரினைக் கொன்ற போது சிந்திக்க ஆரம்பித்தவர்கள் இவற்றுக்கு முடிவில்லையா? என்ற ஒரு சந்தர்ப்பத்திலேயே 83 ஜுலைக் கலவரம் தொடங்கியது"** என்று கூறி தனது பேரினவாத நிலைப்பாட்டை உறுதிப்படுத்தியிருக்கத் தவறி இருக்கவில்லை.

இலங்கைத் தீவின் அரசியல் போக்கையே மாற்றியமைத்த கறுப்பு ஜுலைப் படுகொலைகளுள் உச்சக்கட்டமானதாக "வெலிக்கடைச் சிறைப் படுகொலைகள்" அமைகின்றன. மிகத் திட்டமிட்ட முறையிலே, தமிழின முன்னோடிப் போராளிகளையும், நாட்டுப் பற்றாளர்களையும் (73 பேர்) கூண்டோடு அழிக்கும் முயற்சி இதுவென்பது உச்ச பாதுகாப்புச் சிறையினுள் இரு நாள்களாக படுகொலைகள் நடத்தப்பட்டதன் மூலம் விளங்கிக் கொள்ளத்தக்கது. 1983 ஜுலை 25 இல் 35 பேரும், ஜுலை 27 இல் 18 பேரு மாக மொத்தம் 53 தமிழின உணர்வாளர்கள் கொடூரமாகக் கொல்லப்பட்டனர்.

நீர்வேலி வங்கிக்கொள்ளை குறித்தான வழக்கில் மரணதண்டனைத் தீர்ப்புக்கு உள்ளான தங்கத்துரை, குட்டிமணி முதலான தியாகிகள் முன்னர் வேண்டிய **"எங்கள் கண்களை எமது மண்ணைச் சேர்ந்த பார்வையற்றவருக்கு வழங்குவதன் மூலம் சுதந்திர தமிழ் ஈழம் மலர்வதைக் காண விரும்புகிறோம"** என்ற வேண்டுதலைக் கவனித்து, அவர்களின் கண்கள் இப் படுகொலையின் போது தோண்டி வீசப்பட்ட கொடூரம் 1983.07.25 இல் அரங்கேறியமை ஸ்ரீலங்காவின் பேரினவாதப் பார்வையைப் புலப்படுத்தியது.

1987.07.27 இலும் இரண்டாவது கட்டமான இப்படுகொலை முயற்சியில் தமிழ் அரசியல் கைதிகள் பலர் தற்காப்புத் தயார் நிலையிலிருந்தனர். சிங்கள சிறைக் கைதிகள் (காடையர்கள்) உடன் சமாதானம் பேச முயன்ற "காந்தீயம்" அமைப்பின் செயலாளரான டாக்டர் இராஜசுந்தரம் மண்டை பிளக்கப்பட்டு கொல்லப்பட்டிருந்தார். இப்படுகொலைகளை மேற்கொண்ட குற்றத்தடுப்புக் கைதிகள் எவ்வித இடையூறுமின்றி சுதந்திரமாக இவற்றை மேற்கொண்டனர். இக் கைதிகளுள் இத்தாலியிலிருந்து விமானத்தைக் கடத்திய "மெகா" குற்றவாளியான "சேபால ஏக்கநாயக்க" குறிப்பிடத்தக்கவர். இவர் கடந்த பொதுத் தேர்தலில் அம்பாந்தோட்டையில் "பூமி புத்திர"வில் போட்டியிட்டிருந்தார். "சுதந்திரன்" ஆசிரியர் கோவை மகேசன், யாழ்.மாநகர முதல்வர் டாக்டர் ச.அ.தருமலிங்கம், வண பிதா.சிங்கராயர், காந்தியத்தலைவர் டேவிட், நித்தியானந்தன் முதலானோரும் தற்போதைய ஸ்ரீலங்கா அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவும் இதில் தப்பியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

**தாங்கள் மறைந்தபின் தங்களது கண்களைப் பார்வையற்ற தமிழருக்கு தானம் செய்வதன் மூலம் சுதந்திர தமிழ் ஈழம் மலர்வதைக் காண அவாவிய குட்டிமணி, தங்கத்துரை ஆகிய தமிழ் போராளிகளின் கண்களைத் தோண்டி எடுத்த பேரினவாத காடையர்கள்.**

இலங்கைத் தீவின் சுதந்திரம் பிரித்தானியரிடமிருந்து சிங்களவர்களுக்கு கைமாறியதிலிருந்து காலத்துக்குக் காலம் பல்வேறு வடிவிலான ஒடுக்கு முறைகள் கட்டவிழ்ந்து விடப்பட்டமை வரலாறு. இவற்றில் 1958,1970, 1977, 1983 என பேரினவாதிகளால் திட்டமிட்ட ரீதியில் மேற்கொள்ளப்பட்ட இன வழிப்பு நடவடிக்கைகள் குறிப்பிடத்தக்கனவாகும். 1983 ஜுலையில் மேற்கொள்ளப்பட்டு "கறுப்பு ஜுலை" ஆக சர்வதேச அடையாளத்துவத்தைப் பெற்றுள்ள தமிழின அழிப்பு நடவடிக்கையே யாவற்றிலும் உச்சமானதாக சகலராலும் கருதப்படுகிறது.

**"உணர்ச்சிவசப்பட்ட ஒரு இனத்தின் வெளிப்பாடு"** என்று அன்றைய ஜனாதிபதியால் வர்ணிக்கப்பட்ட இவ்வினவழிப்பு நடவடிக்கைகளுக்குத் தொடக்கப் புள்ளியாக, 1983-07-23 நள்ளிரவில் திருநெல்வேலி தபால் பெட்டிச் சந்தியடியில் தமிழ் ஈழ விடுதலைப் புலிகளால் மேற்கொள்ளப்பட்டு 13 அரச படையினரைப் பலிகொண்ட கரந்தடிக் கண்ணிவெடித் தாக்குதலே கூறப்பட்டிருந்தது. இது வெறும் "சாட்டு" என்பதை இத்தினத்திற்கு முன்பே வடக்கு கிழக்கு தமிழர் தாயகப் பரப்பிலும் அதற்கு வெளியேயும் தமிழர்கள் மீது மேற்கொள்ளப்பட்ட தாக்குதல்களும், இனவெறியைக் கிளப்பிய "துவேஷப் பேச்சு"க்களும் சான்றாகும்.

இவற்றிற்கும் மேலாக, **"இப்பொழுது எனக்கு யாழ்ப்**

**இனவழிப்பில் தமிழ் மக்கள் துவண்டிருக்க "போர் என்றால் போர் சமாதானம் என்றால் சமாதானம்" என்ற ஸ்ரீலங்கா நிறைவேற்றதிகார ஜனாதிபதி**

தமிழ் மக்களை பயமுறுத்திப் பணிய வைக்க முயன்று "கறுப்பு ஜுலை" ஆக இனவெறிக் காடையர்கள் நடத்திய கொலைத் தாண்டவம், ஈழத்தமிழரின் தேசியப் பிரச்சினையை சர்வதேச மட்டத்திற்கு உயர்த்தியதுடன், குறிப்பாக 1990 இன் பின் ஸ்ரீலங்கா அரசாங்கங்களையும் படைத் துறையினரையும் "ஜுலை" பிறந்தவுடனேயே கிலி கொள்ளச் செய்து **"RED ALERT"** விழிப்பைக் கொண்டு வரும் "உளவியல் போர்" நிலையைத் தோற்றுவிக்கவும் காரணமாகியுள்ளது.

**"கறை படிந்து போன**
**பாடங்களின் முடிவில்**
**மக்கள்**
**எப்போதும்**
**புதிய வரலாற்றைப்**
**படைப்பார்கள்!"**

என்ற செழியனின் கவி வரிகளே, முள்ளை முள்ளால் எடுக்க எம்மை நிர்ப்பந்தித்த "கறுப்பு ஜுலை" கற்றுத்தரும் படிப்பினையாகிறதல்லவா?





விருந்தினர் வியப்படைய பரிமாறுங்கள்
பிரவுண்சன்
கோப்பி
BROWNSON
INDUSTRIES
139, Bank shall Street,
Colombo-11.
Tel : 327197


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யோகாசனமும் அதன் மகிமையும்

யோகாசனம் என்பது யோகத்தின் அங்கமாக இருப்பதால் ''யோகாசனம்" என்ற பெயர் வந்தது. மிகவும் பழைமைக் காலத்தில் சிலயோகிகளும் சந்நியாசிகளும் மட்டுமே ஆசனங்களைச் செய்து வந்துள்ளனர். யோகிகளும் சன்னியாசிகளும் பல யோகாசனப் புத்தகங்களை எழுதியிருக்கின்றனர். யோகம் என்றால் மூச்சைப்பிடித்தல், அதை நாம் செய்ய தகாது, என்று நினைத்து விடுகிறோம். அவ்வாறு அல்ல யோகாசனத்தை ஆண்கள், பெண்கள், சிறுவர்கள் முதல் அனைவரும் செய்யலாம். காலையில் கிழக்கில் சூரியன் உதிப்பது எவ்வளவு நிச்சயமோ அவ்வளவுக்கு யோகாசனம் செய்பவர்களுக்கு நோய் வராமல் இருக்கும் என்பதை உறுதியிட்டுக் கூறலாம்.

இன்றைய இளைய சமுதாயத்தினர் ஏதோ சில கெட்ட பழக்க வழக்கங்களை கை விடாமல் இயற்கைக்கு மாறுபட்டு நடப்பதினால் சில கெடுதல்களை உண்டாக்கி தாங்களாகவே நோய்களை உருவாக்கிக் கொள்கின்றார்கள். யோகாசனம் செய்வதால் எதை சாதிக்க போகின்றோம்? என்று இன்றைய இளைஞர்கள், யுவதிகள் கேள்வி எழுப்பலாம். அப்படியாயின் மதுபானம் அருந்துதல், புகைப்பது, தவறான மாதுவிடம் செல்வது எல்லாம் இயற்கையானதா, யோகாசனங்கள் செய்வதால் எம் உடலிலுள்ள உறுப்புக்களை புத்துணர்ச்சிப் பெற செய்து நோய் எதிர்ப்பு சக்தியை கூட்டுகிறது என்பதே உண்மையாகும். இதனால் உடலின் நாடி நரம்புகள் அனைத்தும் புதிய பலத்துடன் செயற்படுகின்றன. அத்துடன் இரத்த ஓட்டமும் அதிகரிக்கின்றது. சுவாச உறுப்புக்களையும் பலமடையச் செய்கிறது. சோம்பல் இன்றி சுறுசுறுப்பு ஏற்படுகிறது. தேவையற்ற சதைகளை குறைத்து உடலை எப்போதும் இளமையுடன் வைத்திருக்கச் செய்கிறது.

**யோகாசனம் செய்யுமுன் கவனிக்க வேண்டியவை**

1. காற்றோட்டமுள்ள இடமாக இருத்தல்.
2. உடல் நிலத்தில் அழுத்தாதவாறு விரிப்பு விரித்தல் வேண்டும்.
3. தளர்வான ஆடைகளை அணிந்து செய்தல் வேண்டும்.
4. வெறும் வயிற்றில் செய்தல் நன்று.
5. யோகாசனம் செய்யும் போது மிக நிதானமாகவும் மனதை ஒரு நிலைப்படுத்தி வேறு எண்ணங்களின்றி செய்தல் வேண்டும்.
6. உடலில் நோய் கண்ட காலத்தில் அல்லது உடல் பலவீனமாக உள்ள நாட்களில் ஆசனம் செய்வதை தவிர்த்தல் வேண்டும்.
7. காலை அல்லது மாலை நேரங்களில் செய்யலாம்.
8. ஸ்நானம் செய்துவிட்டு ஆசனங்கள் செய்யக் கூடாது.
9. நாம் ஆசனங்கள் செய்யும் போது உடற்பயிற்சிகளையும் சேர்த்து செய்தல் கூடாது.

ஆசனங்கள் பல உள்ள போதும் சில ஆசனங்கள் செய்யும் முறைப்பற்றி அவதானிப்போம்.

**பத்மாசனம்**

**பத்மாசனம் செய்யும் முறை**

உடல் நிலத்தில் அழுத்தாதவாறு விரிப்பின் மேல் உட்காரவும். இரண்டு கால்களையும் நீட்டவும் வலது காலை மடக்கி இரண்டு கைகளின் உதவியால் வலது பாதத்தை தூக்கி, இடது தொடையின் மேல் அடிவயிற்றில் குதிக்கால் ஒட்டினால் போல்



அமர்த்தவும். பின்னர், இடது காலை மடக்கி கைகளின் உதவியால் இடது பாதத்தை தூக்கி வலது தொடையின் மேல் அடிவயிற்றில் குதிக்கால் ஒட்டினாற் போல் வைக்கவும். நேராக முதுகை வளைக்காமல் நிமிர்ந்து இருக்க வேண்டும். சுவாசத்தை சாதாரணமாக உள் இழுத்து வெளிவிடலாம்.

இரண்டு கைகளையும் படத்தில் உள்ளபடி சின் முத்திரையுடன் மனதை ஒருநிலைப்படுத்தி பார்வையை மூக்கு நுனியில் செலுத்தவும்.

மனமானது ஒரே நிலையில் இருத்தல் அவசியம். இவ்வாறு இருக்கும் போது மனதை ஒரே நிலையில் வைத்துக்கொண்டு தெய்வத்தை மனதால் வழிபடலாம். இதனை 5 நிமிடம் தொடக்கம் 10 நிமிடம் வரை செய்யலாம்.

**பலன்கள் :-**

அடிவயிற்றுப்பகுதிக்கு இரத்த ஓட்டம் அதிகமாகும். நன்றாக பசி எடுக்கும். வாத நோய்கள் நீங்கும். சுவாச உறுப்புகள் நன்கு இயங்கும்.

**ஆக்கம்:-**
**ஆ.மகேந்திரகுமார்**

# இருமலால் அவஸ்தையா?



என்னதான் மருந்து சாப்பிட்டாலும் இருமல் மறைய அடம் பிடிக்கிறதா? கவலையை விடுங்கள். வீட்டில் மிளகு இருந்தால் வெறும் வாணலியில் நன்றாக வறுத்து மிக்ஸியில் பவுடர் செய்து கொள்ளுங்கள். இப்போது உங்களுக்கு இருப்பது வறட்டு இருமல் என்றால் தேவை நெய் அதனுடன் மிளகு தூளை கலந்து நாக்கில் தடவி சப்பி சாப்பிடவும். உங்களுக்கு சளியினால் இருமல் என்றால் தேனுடன் குழைத்து சாப்பிட இருமல் மாயமாய் மறைந்து போகும்.

# நகச்சுற்றால் அவதியா?

மருதாணி இலைகளுடன் படிகார உப்பை சேர்த்து அம்மியில் அரைத்து எந்த விரலில் நகச்சுற்றோ அதில் மருதாணி போல் இரவில் போட்டுக் கொள்ளவும். காலையில் நகச்சுற்று காணாமல் போயிருக்கும்.

நன்றி:-
ஹெல்த்

# உங்கள் வாழ்க்கைத் துணைவரை மகிழ்விக்க.....

*(சென்றவாரத் தொடர்ச்சி)*



**பிறர் மனத்துடன் நல்லிணக்கம் வளரவேண்டும்**

இரண்டு பேர் ஒன்றுபோல் சிந்திக்க முடியாது தான் என்றாலும் அது ஒன்றும் முடியாததல்ல. ஒன்றுபோலவே சிந்திக்கிற அல்லது அடுத்தவர் என்ன செய்வார் அல்லது சொல்வார் என்று முன்கூட்டியே கூறிவிடுகிற வாழ்க்கைத் துணைவர்கள் இருக்கின்றனர். இவர்களது மனம் ஒருவரோடொருவர் இணக்கமாக உள்ளது. மற்றவரின் மனத்துடன் உங்கள் மனத்தை இணக்கமாகச் செலப் பயிற்றுவிப்பது அப்படி ஒன்றும் கடினமானதல்ல.

**கருத்து மாறுபாடுகளை மென்மையாகக் களையவேண்டும**

கணவனும் மனைவியும் கார்பன் காப்பிகள் போல ஒருவருடைய நிழலாக மற்றவர் இருக்க வேண்டும் என்பதில்லை. அவர்களது கருத்துக்களில் மாறுபாடுகள் அடிக்கடி வெளிப்படுவது இயல்பானதே. எனினும் பலர் தாமாகவே பல சிக்கல்களை உருவாக்கிக் கொள்கிறார்கள். பின்னர் விட்டுக்கொடுக்கவோ, சமரசம் செய்து கொள்வோ இயலாதபடி சிக்கல்கள் முற்றுகின்றன. வாதம் புரியத் தொடங்கி விடுவார்களானால் நீயா, நானா போட்டியில் இறங்கி விடுவார்கள், யார் வெற்றி பெறுகிறார் என்பது முக்கியமல்ல சிக்கல் விடுபடாமல் போய்விடுகிறதே அது தான் பரிதாபம். வெற்றிகரமான திருமண வாழ்வு நடத்தும் கணவன் மனைவியர் ஒருவர் மற்றவருடைய தனித்தன்மைகளை ஏற்றுக்கொள்ள கற்றுக்கொள்கின்றனர். நீண்ட, நிலைத்த மணவாழ்வில் அவர்கள் தங்களுடைய தனித்தன்மையை நிலையாமல் (அத்தனித்தன்மையைக் காத்துக்கொள்ள பல தடவை சண்டையிட்டிருந்தால் கூட) ஒருவர் மற்றவரது பழக்கங்கள் விருப்பங்களுக்கு இசைந்து செல்லவும் கூடும்.

கடவுள் ஒவ்வொரு இதயத்திலும் இணக்கத்தைக் கொண்டு வருவார்.

கடவுளுடைய சித்தப்படி நடக்கும் போது, கணவனும் மனைவியும் ஒருவரையொருவர் மதிக்கின்றனர். அன்பையும் நம்பிக்கையையும் வளர்க்கின்றனர். குடும்பத்தில் அமைதியையும் ஒற்றுமையையும் குலைக்கும் எதையும் உறுதியாக ஒதுக்கித்தள்ள வேண்டும். கனிவும் அன்பும் செழிக்கச் செய்கிற அன்பின் உணர்வை வெளிப்படுத்துகிறவர்கள் அவ்வுணர்வு அவர்கள் மீது திருப்பப்படும் என்பதைக் கண்டு கொள்வார்கள். கடவுளின் ஆன்ம வல்லமை ஆட்சி செய்யும் போது, திருமண வாழ்வில் பொருத்தமில்லை என்ற பேச்சுக்கு இடமில்லை. கடவுள் நம்பிக்கை இல்லத்தில் ஒற்றுமையையும் அன்பையும் நிலைக்கச் செய்யும் மனைவியின் இதயத்தில் கடவுள் குடிகொண்டிருப்பது கணவனின் இதயத்திலும் குடிகொண்டிருப்பதற்கு ஒப்புதல் ஆகும். அவர்கள் ஒற்றுமையாக வாழ முற்படுவார்கள்.

நன்றி:-
ஹெல்த்

## நூல் நயம்

# சங்கநாதம்

சங்கநாதம் 11ஆவது இதழ் கிடைக்கப்பெற்றோம். காலங்காலமாக இந்து தர்மத்தின் உண்மைகளை வெளிக்கொணரவும், இதனால் மக்கள் உள்ளத் தூய்மை பெறவும் அவ்வப்போது சமயப்





பெரியோர்கள் ஆக்கபூர்வமாகச் செயற்பட்டு வந்திருக்கிறார்கள்.

மதத்தின் பால் 'மதம்' 'வெறி' கொள்ளாமல் அன்பே வாழ்க்கையாக அமைய எல்லா மதங்களும் போதிக்கவே செய்கின்றன. ஆனாலும் வலுவான சமய அறிவு போதாமல் பலர் மிருகங்களாக வாழவே துணிகின்றார்கள். இந்த வகையில் மனிதனை மனிதனாக வாழ வைக்க சங்கநாதமும் வழிகாட்டுவதாக அமைந்திருக்கிறது.

இந்த இதழிலே பட்டினத்தார் பாடல்கள், திருக்கேதீஸ்வர ஆலயத்தின் இன்றை நிலை, நீங்களும் கடைப்பிடித்துப் பாருங்களேன், தொடுத்த கணைகளுக்கு அடுக்கிய பதில் மறுபிறப்பு, மீண்டும் கண்ணதாசன் போன்ற தலைப்புக்களில் நல்ல பயனுள்ள விடயங்கள் இடம் பெற்றுள்ளன. இவற்றை விட வேறு பல ஆக்கங்களும் மனித வாழ்வோடு சம்பந்தப்பட்ட சமயத்தோடு கலந்தனவாக பிரசுரமாகியிருக்கின்றன.

எவ்வளவு தான் சமய சம்பந்தமான கருத்துக்களை முன்வைத்து சஞ்சிகைகளை, நூல்களை வெளியிட்டாலும் இவற்றைப் படிப்பவர்களின் தொகை அதிகளவில் இல்லாத குறை உள்ளது. இதற்குக் காரணம் நம்மக்களிடையே வாசிப்புப் பழக்கம் இல்லாததுதான்.

ஆகவே சங்கநாதமும் வாழைப் பழத்தினுள் மருந்து மாத்திரைகளை வைத்துக் கொடுப்பதைப்போல வாசகர்களைக் கவரவேண்டும்.

'சங்கநாதம்' இந்த வகையில் ஓரளவு அதைத் தெரிந்து வைத்துக் கொண்டு வெளி வருவது போல தெரிகிறது.

சங்கநாதம் பரவலாக மக்கட் சமுதாயத்தினுள் நுளைந்து சமயக் கருத்துக்களைப்பரப்பி இந்துக்களை உண்மையான இந்துக்களாக வாழ முயற்சிக்க வேண்டும். ஆசிரியபீடம் இதில் கவனம் செலுத்தும் என்று நம்புகிறோம்.

குணதாசன்

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# யாழ்ப்பாணத்திற்கு ஒரு பயணம் — 4

## பாடப்புத்தகங்களை அனுப்பாத அரசு மதுபானங்களை தாராளமாக அனுப்புகிறது

**இரா.துரை ரத்தினம்**

யாழ்.குடாநாடு விடுதலைப்புலிகளின் கட்டுப்பாட்டில் இருந்த காலத்தில் இருந்த ஒழுக்க கட்டுபாடுகள், பண்பாட்டு நெறிமுறையில் அமைந்த வாழ்க்கை, இவை எல்லாம் இப்போது தலைகீழாக மாறிவிட்டது. 1995ம் ஆண்டில ஸ்ரீலங்கா இராணுவம் யாழ். குடாநாட்டை கைப்பற்றிய பின்னர் நிலமை அடியோடு மாறிவிட்டது.

எங்கும் அட்டகாசம், களவு, கசிப்பு, ஆபாச சஞ்சிகைகள் படக்காட்சிகள், என சீரழிவுகளின் பட்டியல் நீண்டு கொண்டு செலகிறது.

யாழ். குடாநாட்டிற்கு ஆபாசப்படங்களும், சஞ்சிகைகளும் படையினர் ஊடாகவே வந்து சேருகிறது. பாடசாலை மாணவர்களிடம் இவை தாராளமாக உலாவுகிறது. வீடியோ கொட்டகைகளில் ஆபாசப்படக்காட்சிகள் காண்பிக்கப்படுவதற்கு படையினர் மறைமுகமாக உதவி வருவதாகவே அங்குள்ள மக்கள் கூறுகின்றனர்.

அதைக்கட்டுப்படுத்துமாறு கல்விமான்கள் பலரும் படைத்தரப்பை கேட்டபோது படையினர் கூறிய பதில் -

இந்த பொழுது போக்குகள் இல்லாவிட்டால் இளைஞர்கள் புலிகளிடம் போய் சேர்ந்து விடுவார்கள். புலிகளிடம் சேராமல் இருப்பதற்காக யாழ். இளைஞர்கள் கெட்டு சீரழிந்து போக வேண்டும் என்பது படையினரின் நியாயம்.

அண்மையில் யாழ். பல்கலைக்கழகத்தில் நடந்த சட்ட விரோத மது ஒழிப்பு சம்பந்தமான கருத்தரங்கு ஒன்றில் யாழ்ப்பாண மதுவரித்திணைக்கள அதிகாரி ஒருவர் தெரிவித்த கருத்து ஊடகங்களில் வெளியாகியிருந்தது.

அரசாங்கம் யாழ்ப்பாணத்திற்கு பாடப்புத்தகங்களை அனுப்ப தாமதம் காட்டுகிறது. ஆனால் மதுபானத்தை அளவுக்கதிகமாக அனுப்பிவைக்கிறது. இது முற்றிலும் உண்மை என்பதை அங்கு நின்ற ஒருவாரத்தில் நேரில் காணமுடிந்தது. மூலை முடுக்கெல்லாம் மதுசாலைகள் திறக்கப்பட்டிருக்கிறது. அரசியல்வாதிகள், பாராளுமன்ற உறுப்பினர்களின் செல்வாக்கில் மதுசாலைகளுக்கான உத்தரவு பத்திரம் பலருக்கும் வழங்கப்பட்டிருக்கிறது. முக்கியமாக நகரில் உள்ள பாடசாலை மாணவர்கள் மீது இந்த ஒழுக்கக் கேடுபற்றி குற்றச்சாட்டுகள் சுமத்தப்படுகிறது.

யாழ்ப்பாணத்தில் வெளியாகும் வலம்புரி பத்திரிகை மதுப்போத்தலுடன் திரியும் யாழ்.மாணவர்கள் .சாட்டிக்கடலில் அம்மணமாக நின்று ஆடினர். வெறியாட்டம் வீதிகளிலும் தொடர்கிறது என்ற தலைப்பில் முழுப்பக்கத்தில் கட்டுரை ஒன்றை வெளியிட்டிருந்தது.

அந்த கட்டுரையின் சுருக்கத்தை இங்கே தருகிறேன்.

க.பொ.த. சாதாரண உயர்தர வகுப்பு மாணவர்கள் மதுபாவனையில் மும்முரமாக ஈடுபடுகின்றனர். சிகரட் குடித்தல் சர்வசாதாரணமாகி விட்டது. நகரப்பாடசாலை மாணவர்களிடையே ஏற்பட்டுள்ள இப்பிறழ்வு ஒழுக்க நெறிக்குட்பட்ட கிராமப்புற பாடசாலை மாணவர்களிடையேயும் பரவி விடுமோ என்ற அச்சம் கல்வியாளர்கள் மத்தியில் ஏற்பட்டுள்ளது.

அண்மையில் யாழ். நகரில் உள்ள பிரபல கல்லூரியின் உயர் வகுப்பு மாணவர்கள் ஒரு மினிபஸ் மூலம் வேலணை சாட்டிப்பகுதிக்கு சென்றனர். தமது சுற்றுலாவுக்கு ஆசிரியர்களும் வருவதாக கூறியே பெற்றோரிடம் அனுமதி பெற்றிருந்தனர். ஆனால் இச்சுற்றுலா பற்றி கல்லூரி நிர்வாகத்தினருக்கோ ஆசிரியர்களுக்கோ எதுவும் தெரியாது. மினிபஸ்ஸில் சென்ற மாணவர்கள் கூடவே மதுப்போத்தல்கள், சிகரட் பக்கற்றுக்களை ஏராளமாக எடுத்துச சென்றனர். சாட்டிக்கடற்கரையில் மது போதையில் ஆடி கலாட்டா செய்ததுடன் அங்கு எழுத்தில் வடிக்கமுடியாத அளவிற்கு வெட்கக்கேடாக நடந்து கொண்டதாக அப்பத்திரிகை எழுதியிருக்கிறது.

### அடிபோட்ட படை

மற்றொருநாள் இளைஞர் கோஷ்டி ஒன்று மது போதையில் நிர்வாணமாக நின்று நீராடியதாகவும் பின்னர் அருகில் இருந்த கடற்படையினரிடம் சிலர் முறைப்பாடு செய்தனர். அங்கு வந்த கடற்படையினர் வேலியில் இருந்த பனம் மட்டைகளை பிடிங்கி அடிபோட்டு துரத்தியதாக அப்பத்திரிகை விபரித்திருக்கிறது.

யாழ்ப்பாணத்தில் கண்ணிவெடி அகற்றுவதற்காக வந்த வெளிநாட்டவர் பற்றி வெளியான தகவல்கள் யாழ்ப்பாணத்தில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியிருக்கிறது. அச்சம்பவத்துடன் யாழ்ப்பாணத்தில் உள்ள சில முக்கிய புள்ளிகளுக்கும் தொடர்பு இருப்பதாக கூட தகவல்கள் வெளியாகியிருக்கின்றன.

உயர்ந்த நீதிநெறிமுறைகளைக்கொண்ட கந்தபுராண கலாசாரம் எங்கே? யாழ்ப்பாண சமூகம் எங்கு சென்றுகொண்டிருக்கிறது? எல்லாமே தலைகீழாக போய்விட்டது என கவலைப்படும் பலரையும் சந்திக்க முடிந்தது. என்ன இருந்தாலும் பெடியளின்ர கட்டுப்பாட்டிலை இருந்த போது இந்த பிரச்சினை ஒன்றும் இல்லை. இராணுவம் இங்க வந்தபிறகுதான் சீர்கெட்டுப்போய் கிடக்கிறது என கவலைப்பட்டார் ஒரு ஓய்வுபெற்ற அதிபர்.

### வன்னியிலேயே இருந்திருக்கலாம்

யாழ். இடப்பெயர்வின் போது வன்னிக்கு சென்று விஸ்வமடுவில் இருந்துவிட்டு பின்னர் இங்கு வந்த அவர் இங்குவந்தது தப்பாக போய்விட்டது. வன்னியிலேயே இருந் திருக்கலாம் என நொந்து கொண்டார். இடப்பெயர்வு காரணமாக நகரங்களுக்கு வந்திருக்கும் மக்களுக்கு இதுவே பெரும் கவலை. ஒழுக்கத்துடன் வாழ்ந்த தமது பிள்ளைகள் வழிதவறி போய்விடுவார்களோ என்ற அச்சம் பெற்றோருக்கு ஏற்பட்டிருக்கிறது. வடமராட்சி கிழக்கு , தென்மராட்சி பகுதிகளிலிருந்து இடம்பெயர்ந்தவர்கள் யாழ். நகரிலும், பருத்தித்துறை நகரிலும் தங்கியிருக்கிறார்கள்.

வடமராட்சி கிழக்கில் நாகர்கோவி லிருந்து கட்டைக்காடு வரையான கிராமங்கள் முற்றாக இடம்பெயர்ந்து விட்டன. நாகர்கோவில், குடாரப்பு. மாமுனை, செம்பியன்பற்று, தாளையடி, மருதங்கேணி, வத்தி ராயன். உடுத்துறை ஆழியவளை, வெற்றிலைக்கேணி, கட்டைக்காடு ஆகிய 11கிராமங்களிலிருந்தும் மக்கள் முற்றாக இடம்பெயர்ந் திருக்கிறார்கள். சுமார் ஆறாயிரம் குடும்பங்கள் இப்பகுதியில் தமது வீடுவாசல்கள், சொத்துக்கள், அனைத்தையும் இழந்து அகதிகளாகி இருக்கிறார்கள். மூன்று தடவைகளில் இடப்பெயர்வை சந்தித்த வடமராட்சி கிழக்கு இடம்பெயர்ந்தோர் சங்க தலைவர் அ.சா.அரியகுமார் அந்த மக்களின் அவலங்களை விபரித்தார்.

(தொடரும்)

# சிங்கள இனத்தின் பூர்வீகம்

**③**

**பூ.ம.செல்லத்துரை**

இந்த உண்மையை ஜீரணிக்க மகாவம்சத்தாரால் முடியவில்லை. காரணம் நாகர்களைப் பற்றி மகாவம்சத்தாரால் மகாவம்சத்தார் மிக மிக மட்டமாக இட்டுக்கட்டி இழித்தும் பழித்தும், அவர்கள் மனிதரேயில்லை பேய்கள் பிசாசுகள் என்றெல்லாம் எழுதிவிட்டார்கள். இப்படி தங்களால் பேய்கள் பிசாசுகள் என வர்ணிக்கப்பட்ட இனத்தின் தொடர்பின் மூலம் சிங்கள இனம் உருவாகியது, எனக் காட்ட விரும்பாததன் விளைவே பாண்டிய நாட்டு ஓட்டம். ஆனால் உண்மைகள் உறங்குவதில்லை. ஊர் வாயை மூட உலை மூடி கிடையாது. எனவே தான் பாண்டிய நாட்டு ஓட்டம் பாதியிலே நின்று விட்டது. நாகர்களைப் பற்றி சிங்கள சரித்திர ஆசிரியர்கள் வாய்க்கு வந்த படி வம்பளந்துள்ளார்கள்.

ஆனால் அவர்கள் வணங்கும் தெய்வமான புத்தர் ஒரு நாகர் என்பதை அறிஞர் ஓல்ட்கோம் ஆதாரத்தோடு நிருபித்துள்ளார். விஜயன் ஒரு நாகன் என்பதை மட்டக்களப்பு மான்மியம் கூறுகிறது. புத்த மதத்தை இலங்கையில் பரப்ப உதவிய தேவநம்பிய தீசன் ஒரு நாகன். மாவீரன் பராக்கிரமபாகு நாக அரசனாகும். இலங்கையை ஆண்ட மன்னர்களில் பெரும்பான்மையோர் நாகர்களாகும். புத்த மதமே நாகர்களின் நன்கொடையாகும். ஏடறியும் நல்லவர் உணர்வார்கள். உலகமறிந்த உண்மையை மூடி மறைக்க உலை மூடி தேடும் மகாவம்சத்தாரை நினைத்தால் வேதனை. குளிக்கப் போய் சேறு பூசிக் கொண்டவர்கள் அவர்களை இலங்கை வரலாற்றைக் கூறும் மற்றைய நூல்கள் மன்னிக்காது.

The religion of Vijaya and his companions was Saivam and it continued to be the religion of the island for inconsiderable period. C.Britte (1879)

"விஜயனும் அவனது தோழர்களும் மதம் சைவசமயமாகும். நீண்ட காலமாக இலங்கையின் மதமாக சைவ சமயமே இருந்தது" என அறிஞர் பிரிட்டோ கூறுகிறார்.

மாதோட்டத்தில் மிகவும் பழமை வாய்ந்த ஆலயம் ஒன்றிலிருந்தது. அங்கே லிங்க வழிபாடு நடைபெற்று வந்தது. இவ்வாலயத்தை இலங்கை மன்னனான விஜயன் புதுப்பித்து சீரமைத்தான். என அறிஞர் ஹறிம் நெவில் தான் எழுதிய மாதோட்டம் என்னும் நூலில் கூறியுள்ளார்.

இதன் மூலம் இரண்டு உண்மைகள் உறுதி செய்யப்படுகிறது. ஒன்று விஜயனின் சமயம் சைவம், அடுத்தது அவனுக்கு மாதோட்டத்துடன் இருந்த தொடர்பின் மூலம் அவனின் இரண்டாம் தாரம் மாதோட்டத்தைச் சேர்ந்த அரசகுமாரி என்பது தெளிவாகின்றது.

விஜயன் இலங்கையின் நாற்புறமும் நான்கு ஈஸ்வர ஆலயங்களை அமைத்தான். என்று யாழ்ப்பாண வைபவமாலை கூறுகிறது.

"These two contingents one from the North and the one from the South both Dravidian were the dominant components of Sinhala race. A third element was the native population of Yakkas and Nagas also Dravidians. Thus as far as this shows all the component part of the Sinhala Nation were Dravidians. W.F.Gunawarena" The origin of sinhala language siddh ant Parikshanaya"

சிங்கள இனத்தின் மூதாதையாகிய வடக்கிலிருந்து வந்த விஜயனும் பின் தெற்கிலிருந்து வந்தவர்களும் திராவிடர்களும் மேலே காட்டிய இரண்டு காரணங்களாலும் சிங்களவர்கள் திராவிடர்களே. மூன்றாவது காரணம் இலங்கையின் சுதேசிகளான நாகர் இயக்கரும் திராவிடர்களே. எனவே சிங்கள இனம் திராவிடர் என்பதினால் ஐயப்பாட்டுக்கு இடமில்லை என்கிறார் சிங்கள அறிஞர் டபிள்யு. எவ்.குணவர்த்தனா.

சிங்களவர் ஆரியர் என்பதை பரப்பியவர் மாக்ஸ் முல்லராகும். ஆனால் முல்லர் தனது பிற்காலத்தில் ஆரிய இனம் என்ற பதம் பற்றி ஐயம் கொண்டிருந்தார். ஆரிய இனம், ஆரிய இரத்தம், ஆரியரது கண்கள், தலைமுடிகள் ஆகியவற்றைப் பற்றிப் பேசுகிற இனயியலாளர்கள் என்னைப் பொறுத்த வரையில் டொலிக்கோ செபலிக் (DOLICHO CEPHALIC) அகராதி பற்றியோ பிராச்சி செபலிக் (BRACHYOEPHALIC) இலக்கணம் பற்றியோ பேசும் மொழியியலாளன் போன்று ஒரு குற்றவாளியாகக் கணிக்கப்படுவான் என்று 1888ம் ஆண்டு பிரசுரிக்கப்பட்ட BIOGRAPHY OF WORDS) என்ற தனது நூலில் கூறியுள்ளார். ஆரியர் என்றொரு இனமில்லை என்பதை பேராசிரியர் செனக பண்டாரநாயகாவும் ஒப்புக்கொண்டுள்ளார். எனவே விஜயன் ஆரியனல்ல ஆகவே சிங்களவரும் ஆரியரல்ல. ஆகவே விஜயன் பிறந்து வளர்ந்து அடாவடித்தனம் புரிந்த கலிங்கம் திராவிட பூமி தமிழ் தெரி நிலம். இன்றைய ஆந்திராவின் கிழக்குப் பகுதியாகும்.

**கன்னடம் வடுகு கலிங்கம் எதலிங்கம்**
**கொங்கணம் துளுவும் குடகம் குன்று என்பன**
**குணபால் இருபுறச் செய்யுறும் உடன் உறவு**
**பழகு தமிழ் திரி நிலங்களும"**

என்பது அகத்தியர் கூற்று.

எனவே கலிங்கம் தமிழ் திரி நிலம் அவர்க்ள் தாய்மொழி தமிழ் சமயம் சைவம் விஜயன் வந்தது 5ம் நூற்றாண்டின் பின் ஆனால் 1215ம் நூற்றாண்டளவில் கலிங்கத்திலிருந்து வந்து இலங்கையை ஆண்ட மாகோன் தமிழனாகவும் சைவனாகவும் கணிக்கப்படும் போது விஜயன் மட்டும் ஆரியனான விந்தை என்ன, விஜயனின் காலம் ஆரிய இனத் தொடர்பில்லாத காலம். எனவே விஜயன் ஆரியனல்ல. அவன் தமிழனேயாகும்.

"மிக ஆரம்ப காலம் முதல் தமிழினத்துவச் சிறப்புடைய மக்கள் இங்கு வாழ்ந்து வந்ததற்கு பிராமிக் கல்வெட்டுகள் சான்றுகள் பகர்கின்றன." எனச் சேனக பண்டாரநாயக்க தான் எழுதிய "இலங்கை இன உருவாக்க வரலாறு ஒரு சிக்கலான செயல்முறை" எனும் கட்டுரையில் வலியுறுத்தியுள்ளார்.

எனவே சிங்களவர் சித்திரைப் பண்டிகையை கொண்டாடுகிறார்கள். தமிழரும் சேர்ந்து கொண்டாடுகிறார்கள். ஆரியர் தீபாவளி கொண்டாடுகிறார்கள். கிழக்கிலங்கைத் தமிழர்களும் சிங்களவர்களும் கொண்டாடுவதில்லை. இது ஒன்றே சிங்களவர் ஆரியரல்ல என்பதை நிருபிக்கும். தமிழரும் சிங்களவரும் தாய் வழியைப் பின்பற்றுவார்கள். ஆரியர் தந்தை வழியையே பின்பற்றுவார்கள். பழக்க வழக்கம் நடைமுறைகள் அனைத்துச் சிங்களவரும் தமிழரும் ஒன்று. ஆரியர் வேறு எனவே சிங்களவர் ஆரியரல்ல.

### விஜயன் பரம்பரை யார்?

இது வரை தந்த ஆதாரங்களின் படி விஜயன் திராவிடன், சைவன் என்பதை மறுக்கவும் வெறுக்கவும் முடியாத அவன் இறக்கும் வரை பௌத்தம் இலங்கையில் கால் வைக்கவில்லை. சிங்களம் என்றொரு மொழி உலகில் எந்த மூலையிலுமில்லை. அவனோடு உறவாடியவர்கள் திராவிடர்கள். இரண்டு திராவிடர்களின் உறவில் பிறந்த குழந்தை எவ்வாறு ஆரியராக முடியும். இது இயற்கைக்கு முழு மாறான கூற்றாகும். இது ஒரு புறமிருக்க விஜயனின் இரண்டாவது மனைவியுடன் வந்த 1000 கம்மானக் குடும்பங்களைப்பற்றி மகாவம்சத்தாரும் கலாநிதி மல்ல சேகரா அவர்களும் மௌனம் சாதித்துள்ளார்கள். ஏன்? அவர்கள் மூலம் பரவிய மக்களெங்கே? அவர்கட்கு என்ன நடந்தது என்பதை திட்டமிட்டு மறைத்துள்ளார்கள். விஜயனின் இரண்டாவது மனைவியும் அவன் தோழர்களின் மனைவிமார்களும் கம்மானப் பெண்களே ஆகும்.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழுணர்வு நிரம்பப்பெற்ற "தோடம்பழம்"

எண்பத்து மூன்று கலவரத்தையடுத்து திருகோணமலையிலிருந்து பெருந்தொகையான தமிழர்கள் மூதூர் பகுதிக்கு இடம் பெயர்ந்தார்கள். கடற்கரை யோரங்களில் கூடியிருந்தோர் பலர் இந்தியாவுக்கு கடல்மார்க்கமாகச் சென்றனர். பததாம் குறிச்சி, திருக்கடலூர், பள்ளத் தோட்டம், சல்லி போன்ற பகுதிகளில் உள்ளோர் குடும்பம் குடும்பமாகப் படகுகளின் மூலம் இந்தியாவுக்குத் தப்பிச்செல்ல முயன்றதையடுத்து நகரின் ஏனைய பகுதிகளில் உள்ளோருக்கும் பதற்றந் தரவே அவர்களும் மூதூர்ப் பகுதியை நோக்கி இடம் பெயரலானார்கள்.

மூதூருக்குச் சென்ற மக்களை விடுதலைப் புலிகளின் இன்றைய கட்டுப்பாட்டுப் பிரதேசம் வரவேற்றது. கட்டை பறிச்சான், சேனையூர், கடற்கரைச்சேனை, சம்பூர், கூனித்தீவு மக்கள் அவர்களை விழுந்து விழுந்து உபசரித்தார்கள். மனம் கோணாமல் விருந்து போட்

## அரசியலில் ஓர் எழுத்தாளரின் அனுபவம்

டார்கள். எவ்வித குறையும் வராமல் பார்த்துக் கொண்டார்கள். இதற்கென பல இளைஞர்கள் முன்னின்று உழைக்க ஆரம்பித்தார்கள். அவர்களில் தோடம்பழம் எனப் பலராலும் செல்லமாக அழைக்கப்பட்ட இளைஞனும் ஒருவன்.

தோடம்பழத்தின் இயற்பெயர் கதிர்காமத்தம்பி தவராசா. சம்பூரைச் சேர்ந்த தோடம்பழம் தனது சேவையின் மூலம் எல்லோரும் நன்கறிந்த உத்தம இளைஞராக இருந்தார். தமிழுணர்வு நிரம்பப் பெற்ற தோடம்பழம் வன்முறைகளில் எவ்வித நாட்டமும் இல்லாதவர். நிர்க்கதியாக இடம் பெயர்ந்து வந்த திருகோணமலை நகரத் தமிழர்களுக்கு உதவுவதில் அதி தீவிரம் காட்டினார். தோடம்பழத்தின் தீவிரம் பாதுகாப்புத் தரப்பின் மத்தியில் வேறுவிதமான பிம்பத்தைத் தோற்றுவித்தது. அவரை விடுதலைப் புலிகள் அமைப்பைச் சேர்ந்தவர் என்றே அவர்கள் கருதிப் பிடிக்க முயன்றார்கள்.

இப்போது போல் அன்று மூதூர் கிழக்குக் கிராமங்களான கட்டைப்பறிச்சான், சேனையூர் கிராமங்கள் போராளிகளுக்கு பாதுகாப்பானதாக இருக்கவில்லை. ஒரு பொலிஸ்காரன் சைக்கிளில் சென்று எந்த மூலையில் இருக்கும் எவரையும் கைதுசெய்து இழுத்து வரக் கூடிய நிலைமை அன்று இருந்தது. பொலிஸார் தோடம்பழத்தைத் தேடத்தொடங்க அவர் வேறு வகையின்றி தலைமறைவானார். காட்டுப் பிரதேசம் அவரது தலைமறைவு வாழ்க்கைக்குக் கைகொடுத்தது. பலமுறை பொலிஸார் முயன்றும் தோடம்பழம் பிடிபடாமற் போகவே பாதுகாப்புத் தரப்பால் தலைமைப் புலியாகச் சந்தேகிக்கப் பட்டார். அந்தக் காலப்பகுதியில் அவன் மூதூரில் உத்தியோகம் பார்த்துக் கொண்டிருந்தான். அவனுடன் உரையாடும் பொலிஸார் தோடம்பழம் பற்றி மிகையான பயங்கரக் கதைககளைக் கூறக் கேட்டு மனதுக்குள் நகைத்துக் கொள்வான்.

தோடம்பழம் தமிழுணர்வு நிரம்பப் பெற்றவன். அகிம்சைவாதி. ஆனால் தீவிரப் போக்காளன் என்றெல்லாம் அவர்களுக்கு விளக்கமளித்தால் என்ன என்று அவன் நினைத்துக் கொள்வான். ஆனால் அவ்வாறு எதையாவது கூறப் போய் அவனையும் தோடம்பழத்தின் அமைப்பைச் சேர்ந்தவன் என்று பொலிஸார் இழுத்துச் செல்லக்கூடும் என்ற பயம் அவனை அடக்கி வைத்தது.

ஆனால் ஒருநாள் தோடம்பழம் பொலிஸாரால் சுட்டுக் கொல்லப்பட்ட போது அவன் நெஞ்சு பதறித் துடித்தது. தோடம்பழத்தை அவன் நேரடியாகக் கண்டதில்லை. அவன் கறுப்பா, சிவப்பா என்பது கூட அவனுக்குத் தெரியாது. எந்தத் தொடர்பும் இல்லாத போதும் தோடம்பழத்துக்காக அவன் மனம் அழுதது. தோடம்பழத்தைச் சுட்டு ஜீப்பின் பின்புறம் போட்ட பொலிஸார் அவனது தலைப்பக்கம் வெளியே தொங்கும் படியாக வைத்துக்கொண்டு மூதூர் நகர வீதியெங்கும் வலம் வந்து குதூகலித்துக் கொண்டதை அவனால் இன்று கூட மறக்க முடியவில்லை. அகிம்சாவாதியைச் சுட்டுக் கொன்ற பொலிஸ் வீரர்கள் உடனடியாகப் பதவி உயர்வு பெற்றுக் கொண்டார்கள் என்றால் பொலிஸ் அறிக்கைகள் தோடம்பழத்தை எவ்வளவு தூரம் கணக்கிட்டு வைத்துள்ளது என்பதைப் புரிந்து கொள்ள முடியும்.

தோடம்பழத்தின் மறைவுக்குப் பின்னர் மூதூர்ப் பகுதித் தமிழ்க் கிராம இளைஞர்கள் பெரு

**அருண்**



வாரியாக இயக்கத்தில் இணைந்த கொள்ள ஆரம்பித்தனர். விடுதலைப் புலிகள் என்றும், புளொட் என்றும், ஈரோஸ் என்றும் கட்டை பறிச்சான், கடற்கரைச் சேனைப் பகுதிகளில் இளைஞர்கள் திரள ஆரம்பித்தார்கள். இறால் குழிப் பகுதியில் ஈ.பி.ஆர்.எல்.எவ்.என இளைஞர்கள் திரண்டார்கள். என்றாலும் பொலிஸாரும் இராணுவத்தினரும், இளைஞர் பகுதிகளுக்கும் அடிக்கடி சென்று வந்தார்கள். தீவிரவாத இளைஞர்கள் தப்பிவிட அப்பாவிகளைப் பிடித்துக் கொண்டு வந்து சித்திரவதை செய்தார்கள்.

இளைஞர்கள் சிறு சிறு தாக்குதலை ஆரம்பித்தார்கள். இராணுவம் அப்பாவிகளைப் பழிவாங்கத் தொடங்கியது. ஒரு தடவை திகதி அவனுக்கு நினைவில்லை. பதினெட்டு இளைஞர்கள் பொலிஸாரால் கட்டைப்பறிச்சான் சேனையூர் பகுதியில் சுடப்பட்டார்கள். இவர்கள் அத்தனை பேரும் தானுண்டு தன் குடும்பம் உண்டு என்று வாழ்ந்தவர்கள் என்று அவனுக்கு நன்றாகத் தெரியும். இவர்களில் ஐந்து அல்லது ஆறு இளைஞர்களை அவன் நேரடியாகவே அறிவான். இக் கொடுரம் மூதூர் பகுதியையே உறைய வைத்தது.

முதன் முதலாக மூதூரில் விடுதலைப் புலிகள் கண்ணி வெடி வைத்து வெற்றிகரமாக நிறைவேற்றினார்கள். கட்டைப்பறிச்சான் பாலத்துக்கருகில் வைக்கப் பட்ட கண்ணி வெடியில் பொலிஸ் ஜீப் சிக்கியது. ஆறு பொலிஸார் உடனடியாகக் கொல்லப்பட்டனர். அன்று மாலை வானொலி செய்தி அறிக்கை வாசிக்கப்பட்டது. அதில் மூதூர் கண்ணி வெடியில் ஆறு பொலிஸார் கொல்லப்பட்டனர் என்றும் அவர்கள் திருப்பிச் சுட்டதால் இரண்டு புலிகள் இறந்தனர் என்றும் அது கூறியது.

இந்தச் செய்தியின் நகைச்சுவை திருகோணமலை மக்களை விட்டுவிலக அதிக காலம் எடுத்தது. கட்டைப்பறிச்சான் கண்ணி வெடியில் அகப்பட்ட பொலிஸார் திருப்பிச் சுட்டதால் திருகோணமலை நகரத்து யாழ் கபேச் சந்தியில் இரண்டு தமிழர்கள் இறந்தனர் என்று மக்கள் சொல்லிச் சொல்லி சிரித்துக் கொண்டார்கள். லங்காபுவத் செய்திகளைக் கேட்டுப் பொறுக்க முடியாமல் கல்முனையில் ஒரு நபர் தனது வானொலிப் பெட்டியை உலக்கையால் அடித்து நொறுக்கிய சம்பவம் பற்றியும் பத்திரிகையொன்றில் செய்தி வெளியாகி துயரத்தின் மத்தியிலும் தமிழர்களை வயிறு குலுங்கச் சிரிக்க வைத்துக் கொண்டது.

இது எண்பத்து நாலாம் ஆண்டுப் பகுதி என்றே அவனுக்கு ஞாபகம். அதுதான் மூதூரின் முதலாவது கண்ணி வெடிச் சம்பவம். பொலிஸார், இராணுவத்தார் கண்களில் பய உணர்வு பட்டவர்த்தனமாகத் தெரிந்தது. மக்களோ துயரத்தின் மத்தியிலும் குதூகலமாகக் காணப்பட்டார்கள்.

இக் கண்ணி வெடிச் சம்பவத்தையடுத்து கட்டைப்பறிச்சான், சேனையூர், கடற்கரைச்சேனை, நாவலடி, சம்பூர், கூனித்தீவு ஆகிய கிராமங்களுக்கு பொலிஸாரும், இராணுவத்தினரும் எழுந்தமானமாகச் சென்றுவருவது தடைப்பட்டது. பலநாள் திட்டமிட்டு பெருங் கோஷ்டியாகவே இறங்க வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டது. அப்போது அப்பகுதியில் விடுதலைப் புலிகள் அமைப்பின் பொறுப்பாளராக கணேஷ் என்பவர் இருந்தார். கண்ணி வெடிச் சம்பவத்தால் கணேஷின் பெருமையும் விடுதலைப் புலிகளின் திறமை சார்ந்த மதிப்பும் மூதூரில் கிடுகிடுவென உயர்ந்தன. இதுபற்றி ஒரு முதியவர் அவனிடம் பேசும்போது "தம்பி கணேஷப் பெருமானின் புண்ணியத்தால் நாங்கள் கவலையில்லாமல் இருக்கிறோம்." என்று கூறிய வார்த்தைகளின் நினைவு இன்னும் அவன் காதுகளில் ஒலிக்கிறது.

(தொடரும்)

# காலச் சுவடுகள்

*அடக்குமுறையாளர்களின் அநீதியான ஆட்சியை எதிர்த்து மக்கள் கிளர்ந்தெழும் போதெல்லாம், அவர்களது விடுதலைப் போராட்டத்தை வேரறுக்கவென பல்வேறு ஒடுக்குமுறை வடிவங்களை ஆட்சியாளர்கள் கையாள்வதை வரலாற்றில் நெடுகிலும் காணலாம்.*

*வரன்முறையற்ற அடாத்தான கைதுகள், தடுப்புக் காவல்கள், வதை முகாம்களில் இட்டு இம்சித்தல், சித்திரவதைகள், அடக்கப்படும் இனப் பெண்களினைப் பாலியல் வன்புணர்ச் சிக்குள்ளாக்கி "இனத்தூய்மை" யை இல்லாதாக்கல்... முதலான எண்ணற்ற வழிவகைகள் அத்தகையனவாகும். சிறைச்சாலைப் படுகொலைகளும் அத்தகைய அடக்குமுறை வடிவமாகக் கைக் கொள்ளப்பட்டு வந்துள்ளன.*

*இலத்தீன் அமெரிக்க நாடான பெரு **(PERU)** வில் விடுதலை கோரிப் போராடும் "ஒளிரும் பாதை" **(SHINING PATH)** இயக்கப் போராளிகள், ஆதரவாளர்கள் என சிறையில் வாடிய நூற்றுக் கணக்கானோர்*

**கோ.துரைகுமாரன்**

*"பெரு" இராணுவத்தினரால் 1986 ஏப்ரலில் (என்று ஞாபகம்) படுகொலை செய்யப்பட்டமை இதற்குச் சிறந்த உதாரணமாகும்.*

*மேலும், ஐரிஷ் விடுதலைப் போராட்டத்திலே "டப்ளின்" சிறைச்சாலையில் இடப்பட்ட ஐரிஷ் போராளிகள் தம்மை விடுவிக்குமாறும் அரச அட்டூழியங்களை எதிர்த்தும் உண்ணா நோன்பு இருந்தபோது, அரச அதிகாரிகளால் பலவந்தமாக உணவு ஊட்ட முயன்ற கலவரத்தில், 1916ம் ஆண்டு கலகத்திற்குத் தலைமை தாங்கிய தளகர்த்தர் "டாம் ஆன்" உயிர் துறக்க நேரிட்டது. ஐரிஷ் விடுதலைப் போராட்டத்தில் முதன் முதல் உண்ணாவிரதம் இருந்து உயிர் நீத்த போராளி "பொபி சாண்ட்ஸ்" என்பது இவ்விடத்தில் குறிப்பிடத்தக்கது.*

*ஈழத்தமிழ் தேசிய விடுதலைப் போராட்டத்திலும் வெலிக்கடைச் சிறைப்படுகொலை தொட்டு களுத்துறை, பிந்துனுவெவ என பேரினவாதிகளால் படுகொலைகள் திட்டமிட்டு மேற் கொள்ளப்பட்டுள்ளமையை இல*

## எழுச்சிக்குரல்

*குவில் மறந்துவிட முடியாது. 1983 ஜூலை 23 இல் திருநெல்வேலி கண்ணி வெடித் தாக்குதலையடுத்து, ஜூலை 25 இல் 35 பேரும் ஜூலை 27 இல் 18 பேரும் ஆக 53 தமிழின உணர்வாளர்களும், நாட்டுப்பற்றாளர்களும் வெலிகடைச் சிறைச்சாலையில் கொல்லப்பட்டமை "கறுப்பு ஜூலை" ஆக என்றும் நினைவிற் கொள்ளப்படும்.*

*"கறுப்பு ஜூலை" ப் படுகொலைகள் நடந்து பதினெட்டு ஆண்டுகள் உருண்டோடும் தருணத்தில், தமிழ்த் தேசியத்தின் நலனுக்காக இன்னுயிர் நீத்த தியாகிகளை நினைவு கூர்ந்து, "மூயின் பசைசோ" (1927-1984) என்ற பலஸ்தீனக் கவிஞனின் "காலச் சுவடுகள்" என்ற கவிதை (மொழி பெயர்ப்பு - எம்.ஏ.நுஹ்மான்) இவ்வார "எழுச்சிக்குரல்" ஆக இடம் பெறுகின்றது.*

**"சகோதரா**
**அவர்கள் என் கழுத்தில்**
**வாளைத்தீட்ட முயன்றாலும்**
**நான் முழந்தாளிட மாட்டேன்.**
**இரத்தம் தோய்ந்த என் வாயில்**
**அவர்களது சவுக்கடி விழுந்தாலும்**
**விடியல் மிக நெருங்கி வந்தாலும்**
**நான் பின்வாங்க மாட்டேன்**
**எங்கள் மூர்க்கமான புயலுக்குப் பாலூட்டும்**
**நிலத்திலிருந்து நான் எழுச்சியடைவேன்.**

**சகோதரா**
**உன்னை மண்டியிடச் செய்ய**
**கருணை கேட்டு இரந்திடச் செய்ய**
**உன் கண் எதிரே**
**கொலையாளிகள் என்னைக்**
**கொலைக் களத்துக்கு இழுத்துச் சென்றாலும்**
**நான் மீண்டும் சொல்கிறேன்**
**சகோதரா**
**பெருமை மிக்க உன் தலையை நிமிர்த்தி**
**அவர்கள் என்னைக் கொல்வதைப் பார்**
**என் கொலையாளிக்குச் சாட்சியாய் இரு**
**என் குருதியில் தோயும் வாளுக்குச்சாட்சியாய் இரு**
**குற்றமற்ற எம் குருதியைத் தவிர**
**கொலையாளியை அம்பலமாக்கும் சக்திதான் எது?**

**இரவில் அவர்களின் துப்பாக்கிகள்**
**தன் பதுங்கு குழியிலிருந்து**
**அவனைக் கடத்திச்சென்றன**
**சிறைக் கூடத்தின் இருட்டறையுள்**
**வீரன் வீசி எறியப்பட்டான்**
**சங்கிலிகளின் மேலே மினுங்கும்**
**ஒரு பதாகை போல அங்கு அவன் இருந்தான்**
**மிளிரும் எம் எதிர்காலத்தை மூடிய**
**சாம்பலை எரித்தவாறு**
**சங்கிலிகள் ஒளிவிடும் சுடர்விளக்காகின**
**இப்போதும் அந்த வீரன் வாழ்கிறான்**
**அவனது காலடிச் சுவடுகள்**
**ஒவ்வொரு சிறைச்சாலையின்**
**மூடிய சுவர்களுக்குள்ளும்**
**வெற்றிக் களிப்புடன் ஒலி செய்கின்றன!"**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிறுகதை

# நாகங்கள்

ஆவரங்கால் சுதன்

என்னுடைய வீடு பெரிய காணிக்குள்ளை அமைந்திருக்கு:

நானும் அயல் வீட்டுப் பெடியனுமாய் பரந்த எங்கடை வளவுக்குள்ளை. ஒளிச்சுப் புடிச்சி, பேணிப்பந்து, கிளிக்கோடு என எமது விருப்பப்படி ஏதாவதொரு விளையாட்டை விளையாடியபடிதானிருப்பம்.

ஒவ்வொரு மாலைப்பொழுதும். ஆட்டமும், பாட்டமும் கூத்தும் கலந்து இனிமையாகக் கழியும். என்னுடைய வளவுக்குள்ளை ஒரு மூலையில் சிறு புத்து இருந்தது. அந்தப் புத்துக்குப் பக்கத்தாலையும். மேலாலையும் நாங்கள் ஓடியாடி விளையாடுவம்.

மஞ்சள் பாம்புகள் வளவுகளுக்குள்ளாலை போகும். சிலவேளை பாம்புகள் அந்தப் புத்துக்குள்ளை புகுந்து கொஞ்ச நேரம் இருந்திட்டு வெளியேறிப் போயிடும். ஆரம்பத்திலை பாம்புகளைக் கண்ட உடன நெஞ்சுவெளி திக்கென இருள இதயம் படக்குப் படக்கென்று மோதும்.

பிறகு விஷமில்லாத சாரைகள் என்று அப்பா சொன்னதும் பயம் தெளிந்து நாங்கள் எங்கடை பாட்டிலையும், அவைகள் தம்பாட்டிலும் அலையும். நாங்கள் பனிக்கட்டிகளாய் கரைய! புத்து பெருத்துப் பெருத்து அகன்று விரிந்தது. எமது காணியும் சுருங்கிப் போச்சு. புத்துக்குக்கிட்ட நாங்கள் போனால்....!

உள்ளுக்கையிருந்து உஸ்... உஸ்... என்ற ஒலி கேட்டது. என்னுடலில் பயக்குளிர்காற்று மோத உடம்பு நடுங்கியது. அதுக்குள்ளை என்ன இருக்குதென்று எங்களுக்குத் தெரியாதுதான்.

அதுக்குப் பிறகு நாங்கள் புத்துப்பக்கம் போகாமல் இஞ்சாலை தள்ளி விளையாடி வந்தம்.

அந்தப் புத்துக்குப் பக்கத்திலை ஒரு பெரிய புளியமரம் நிண்டது. அந்த மரம் எங்களுக்கு வருடா வருடம் நிறைய வருமானம் தரும். அதன் பழங்களை உலுப்பி உடைத்து விற்று வருவாயில்தான் என்னுடைய படிப்புக்குத் தேவையான பொருட்களையும், உடுபிடவைகளையும் அப்பா வாங்கித் தருவார்.

ஒருநாள் புளியம்பழம் பொறுக்கிச் சாப்பிடுவம் என நினைத்து புளியமரத்தடிக்குக் கிட்ட போனோம். புத்துக்குள்ளையிருந்து ஏதோ உர்....ச்ஸ்...உர்...ச்ஸ்... என சீறிக் கேட்டது.

சத்தம் செவிப்புலனில் நுழைந்ததும் எனது சரீரம் சில்லிட்டு விறைத்தது. ஓடிப்போய் அப்பாட்டைச் சொல்லி கூட்டிக்கொண்டு வந்து பார்த்தம். பல ஓட்டைகளுக்குள் ஒன்றிலிருந்து பாம்பு தலையை நீட்டி நீட்டி எங்களை நோக்கியது.

தன் நாக்கை வெளித்தள்ளி நீட்டி உள்ளிழுத்தது. அந்த நீள நாக்கு மயிர் முளைக்காத என் நெஞ்சை நக்கி நக்கி இழுப்பது மாதிரியிருக்க அணிந்திருந்த காற்சட்டை நனைந்த மாதிரியிருந்தது. அப்பா கூர்ந்து பார்த்திட்டு! எடேய் உது நாகமடா...! வாடா... வா...வா.... இஞ்சாலை கெதியா வாங்கோ சங்கு சக்கரமெல்லாம் தெரியுது. உந்தப் பாம்பு வாய்வச்சுதெண்டால் ஆள் தப்பாது என்றவாறே வியர்த்து, விறுவிறுக்க எங்களையும் கூட்டிக் கொண்டு அப்பா வீட்டடிக்கு வந்திட்டார்.

''தம்பி நீ இனிமேல் அவடத்துக்கு விளையாடப் போகக்கூடாது. புத்துப்பக்கம் உன்னைக் கண்டனெண்டால் உரிச்சுப் போடுவன்" அப்பாவின் குரலில் களைப்பும், கனைப்பும் இளையோடியிருந்தது.

நாகங்களுக்குப் பயத்திலை... என்ரை வீட்டிற்கு விளையாட வராமல் எல்லாப் பெடியளும் நின்றிட்டாங்கள். அதோட எங்கடை விளையாட்டுக்களும் நின்று போச்சுது. ஒரு சோகக் கொடி என் மனசில் படரத் தொடங்கியது.

புளிய மரத்தினுடைய வருமானமும் இல்லாமல் போய்விட்டது. அதால படிப்புச் செலவுக்கும் காசில்லாமல் கஸ்ரப்படவேண்டியிருந்தது. எவ்வளவு மகிழ்ச்சியாய் விளையாடினனாங்கள். அதுவும் எமது வளவுக்குள்ளை சிட்டுக்குருவிகளைப் போல இந்த மன உளைச்சலில் புரண்டு...! மனம் குமைய...! எரியும் எண்ணெய்த்தாச்சிக்குள் வீழ்ந்த பூச்சியாய் என் கமிழ்ச்சி கருகிப் போனது. துயரம் இதயத்தில் ஊற ஊற சில வேளைகளில் விழிக்குள்ளிருந்து வெளியேறிய கண்ணீர்த்துளிகள் கன்னவரம்புகளில் விரைவாய் நடந்து கழுத்து வழி இறங்கும்.

ஒருநாள் நான் படிச்சுக் கொண்டிருக்க எனக்குப் பக்கத்திலை வந்தமர்ந்த அப்பா தம்பி நீ இனிமேல் பகலில மட்டுமில்ல இரவில கூட ஒண்டுக்கிருக்க, அதுக்கிதுக்கெண்டு வெளியில போகாத. ஏனென்டால் உந்தப் புத்துக்குள் எத்தினை நாகங்கள் இருக்குமெண்டு ஆருக்குத் தெரியும்.?

> இஞ்சாரப்பா உவன் பிள்ளை ஆகக் கவனம். அவன் சின்னப் பிள்ளை. பகலில உதுக்கிளால.... அதுக்கிளாலயெண்டு துள்ளித் திரிஞ்சு விளையாடுவன். இனி மேல் அவனையும் வளவுக்குள்ளை கண்டபடி விளையாட விடாதையப்பா. கண்காணிப்பில வைச்சிருக்கோணும்.

அதுகள் இரவிலதான் கண்டபடி இரை மேய வருங்கள். அப்பேக்க உன்ர காலடிக்குள்ள அதுகளும் வந்தால் கொத்தியெல்லே போடும். அதால சரியான அவதானமாக நாங்கள் தான் இருக்கோணும். என்று புத்திமதிகள் கூறினார்.

பிறகு அம்மாவைப் பார்த்து பெருமூச்சொன்றை உள்ளிழுத்து வெளியே விட்டபோது அந்த மூச்சு என் சொக்கயைச் சுட்டது.

இஞ்சரப்பா உவள் பிள்ளை ஆகக் கவனம். அவள் சின்னப்பிள்ளை. பகலில உதுக்கிளால.... அதுக்கிளாலயெண்டு துள்ளித்திரிஞ்சு விளையாடுவாள். இனிமேல் அவளையும் வளவுக்குள்ளை கண்டபடி விளையாட விடாதையப்பா. கண்காணிப்பில வைச்சிருக்கோணும்.

பனிக்குளிரிலை உறைஞ்சு போற தேங்காய் எண்ணெய் மாதிரி அப்பாவினுடைய கதையைக் கேட்ட அம்மாவும் உறைஞ்சு போய் நின்றா ஆடாமல் அசையாமல்.. பிறகும் அப்பாதான் தொடர்ந்து கொண்டு போனார்.

இரவில நாங்கள் நித்திரை கொள்ளேக்கள்ளையும் பயம்தானப்பா. ஏனெண்டால் புத்து புடைத்துப்போய் இருக்கிறதால உதுக்க கனக்கப்பாம்புகள் இருக்குமெண்டு நினைக்கிறன். அந்த நாகங்கள் இரை மேய்ந்து மேய்ந்து உலாவி வருகிறபோது....? கதவு இடுக்குகள் பொட்டுகளுக்குள்ளாலையும். சுவர் வழியே ஏறியும் வீட்டுக்க வந்தும் கொத்திப்போடும். அதுகளுக்கு என்ன தடையப்பா இருக்குது? நாங்கள் தான் மிகக் கவனமாய் இருக்கோணும். அப்பா இப்படிச் சொல்லச் சொல்ல வறுக்க வறுக்க செத்தல் மிளகாய் கரிகி கறுப்பாகுவதைப் போல.... அம்மாவினுடைய சிகப்பு முகமும்



கறுத்துக்கொண்டு போனது. ''ம்....ம்...நீங்கள் நெடுக கதைக்கிறதோட மட்டும் நிண்டுவிடுவியள். இப்பிடியே உந்தப் புத்தை விட்டிட்டு இருந்தா எத்தின நாட்களுக்கு இரவிலயும் பகலிலயும் நிம்மதியில்லாம பயந்து பயந்து உயிரைக் கையில பிடிச்சுக் கொண்டு வாழுறது?

உந்த அயல் சனங்களையும் சேர்த்து புத்தை வெட்டிப் பிரிச்சுவிடுங்கோவனப்பா. நீங்கள் ஒரு முயற்சியும் இல்லாமல் வீட்டுக்க முடங்கிக் கிடந்தால் ஆர் வெட்டுறது? எங்கட வீட்டு வேலையை நாங்கள் தான செய்யோணும்.

''பயந்தவன் கண்களுக்கு இருண்டதெல்லாம் பேய்" என்ற நிலைதான் உங்களின்ர வேலை. அடுப்புத் தணலுக்கை போட்ட உப்பு மாதிரி அம்மா வெடிச்சுத் தள்ளினா. அதனால அம்மான்ர நெஞ்சு மட்டும் மேலும் கீழும் போய் வந்தது.

''நீர் என்னடியப்பா விசர்க்கதை கதைக்கிறாய்" நாகங்கள் வாழுற குகையை வெட்டியெறியிறது சாதாரண விளையாட்டே. அல்லாட்டி அந்த நாகங்கள் தான் சும்மா விட்டிடும் எண்டு நினைக்கிறியோ?

பேசாமல் இருடியப்பா. உன்ர பாட்டில உனக்கேன் தேவையில்லாத வேலை. உனக்குனக்கெண்டு இருக்கிற வேலையைச் செய்யடியப்பா நீ" அப்பா சரியான பயந்தவர். அம்மாவை ஏசி அடக்கிப் போட்டார். எல்லோரும் அவரவர் படுக்கைக்குப் போட்டினம். ஆனால் அன்றைய இரவு எனக்கு மட்டும் பகல் மாதிரியே இருந்தது. நித்திரை வரயில்லை. என்னுடைய மகிழ்ச்சி இனிமைகள் எல்லாம் உதிர்ந்த சருகுகளாய் காற்றில் பறந்து எங்கோ காணாமல் போய்விட்டிருந்தன. துக்கம் பலூனாய் பெருத்து தொண்டையை அடைத்துக் கொண்டது.

கல்வியைத் தொடர இடர்ப்படுவது நண்பர்களுடன் சுகந்தமாய் கழிந்த மாலைப் பொழுதுகள். அவை பயத்திலை வீட்டுக்கு வராமல் நின்றது என இப்படியே நினைவுகள் ஒவ்வொன்றாக எனக்குள் வேர் பரப்பி இதயத்தை பிரிக்கத் தொடங்கியது.

முழு மனிதர்களுமே வாழ்க்கையை ஓட்டிச் செல்வதற்கு, சேமிப்பதற்கு, பிற இன்னோரன்ன தேவைகளுக்காகவும் என எல்லோருமே ஏதோவொரு வகையில் வியர்க்க வியர்க்க இளைத்து பகலில்தான் உழைக்கிறார்கள். அதற்காக கஸ்ரப்படுகிறார்கள். சண்டைகள் , சச்சரவுகள், வாக்குவாதங்கள், முரண்பாடுகள் என என்ன நடந்தாலும் அவைகள் பெரும்பாலும் பகலில் தானே நடக்கின்றன. ஆனால் இந்த இரவுகள்தான் ஒரு மனிதன் எல்லாம் மறந்து சிந்தித்து, அலசி, ஆராய்ந்து நல்ல முடிவுகள் எடுப்பதற்கும், மாடாய் உழைத்தவன் நிம்மதியாய் உறங்குவதற்கும் காரணமாய் இருக்கின்றன.

அந்த இரவுகளே நிம்மதியில்லாத போது....? இரவுகள் எதற்கு? எனக்கும் அதுமாதிரித்தானே. நாகங்கள் எப்போது வீட்டிற்குள் வரும்? கொத்தும்? என நினைத்தபடியே ஒவ்வொரு இரவுகளும் கழிய போகின்றன பயத்தில இரவிரவாக சதா சிந்தித்துக் கொண்டே கிடந்து உழல்கின்ற நான் விடிவதற்குள் தீர்க்கமானதொரு முடிவுக்கு வந்தேன். அதாவது விடிந்ததும்... விடியாததுமாக என்னோடு படிக்கிற பெடியளை அழைத்து வந்து புத்தை வெட்டி அதற்குள் இருக்கிற நாகங்களை அடித்துக் கொல்வதென்று; புத்துவெட்டி, மண்வெட்டி, பிக்காஸ், பொல்லுகளோடை பெடியள் வந்தாங்கள்.

அப்பாவும் ஒரு மண்வெட்டியோட...! அம்மாவும் தடியோட நின்றது எனக்கு மகிழ்ச்சியாய் இருந்தது.

நன்றி:- ஈழநாதம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிறுவர் மலர்

## துன்பத்தில் நீங்காத நட்பு

முன்னொரு காலத்தில் கங்கைக் கரையில் இருந்த அத்தி மரத்தில் பச்சைக்கிளி ஒன்று தங்கியிருந்தது. அந்த மரத்தின் பழங்களைத் தின்று அங்கேயே பல ஆண்டுகள் வாழ்ந்து வந்தது. அது அந்த மரத்தைத் தன் நண்பர்களுள் ஒருவனாகக் கருதியது.

திடீரென்று அந்த மரம் பட்டுப் போயிற்று. அதில் தங்கியிருந்த மற்ற பறவைகள் எல்லாம் புறப்பட்டன.

அவற்றுள் ஒன்று, 'கிளியே! நீயும் எங்களுடன் வந்து விடு. இனி இங்கே வாழ முடியாது. சிறிது தொலைவில் உள்ள காட்டில் பழ மரங்கள் நிறைய உள்ளன. அங்கே மகிழ்ச்சியாக இருக்கலாம்' என்று அழைத்தது.

'இனி எனக்கு வாழ்வோ சாவோ என் நண்பனாகிய இந்த மரத்தோடு தான். என் நண்பனைப் பிரிந்து நான் வர மாட்டேன். உங்களுக்கு விருப்பமான இடத்திற்குச் செல்லுங்கள்' என்றது கிளி. பறவைகள் எல்லாம் அந்த மரத்தை விட்டு பறந்து சென்றன.

பட்டுப்போன அந்த மரத்தில் அமர்ந்து வெயில் மழை என்று பாராமல் காலத்தைக் கழித்தது கிளி.

பசி எடுத்தால் அந்த மரத்தின் பட்டைகளை உண்ணும். கங்கையில் நீர் குடித்துத் தாகத்தைப் போக்கிக் கொள்ளும். மீண்டும் மரத்தில் வந்து அமரும்.

அங்கு வந்த தேவதை ஒன்று, 'ஏ! கிளியே! பழம் பழுத்த மரங்கள் ஏராளமாக உள்ளன. பட்டுப்போன இந்த மரத்தை விட்டுச் செல்' என்றது.

'தேவதையே! நன்றி உணர்வால் தான் நான் இந்த மரத்தை விட்டுச் செல்லவில்லை. பழகிய நண்பர்கள் வாழ்விலும் சாவிலும் இணைந்தே இருப்பார்கள். உணவு இல்லாமல் என் உயிரே போவதானாலும் சரி. இங்கிருந்து நான் செல்ல மாட்டேன்' என்று • உறுதியுடன் சொன்னது கிளி.

தேவதையின் உள்ளம் நெகிழ்ந்தது. 'கிளியே! உன் நட்பின் பெருமையை உணர்ந்தேன். உனக்கு என்ன வரம் வேண்டும்? கேள்' என்றது.

'என் நண்பன் மீண்டும் உயிர் பெற்றுப் பழைய வளம் பெறவேண்டும். நான் எப்பொழுதும் நண்பனைப் பிரியக்கூடாது' என்றது கிளி.

'அப்படியே தந்தேன்' என்று சொல்லி விட்டு மறைந்தது தேவதை.

மீண்டும் உயிர்பெற்று நிறைய பழங்களுடன் காட்சி அளித்த மரத்தைப் பார்த்து மகிழ்ந்தது கிளி.

## பாலைவனம்



முதன் முதலில் கடவுள் உலகத்தைப் படைத்தார். அப்பொழுது இந்த உலகம் பசுமையான வயல்களும் பூஞ்சோலைகளும் கனி மரங்களும் நிறைந்து மிக அழகாக காட்சியளித்தது. உலகில் எங்குமே பாலைவனம் இல்லை.

அதன் பிறகு கடவுள் இந்த உலகத்தைப் பார்த்துக் கொள்ள மனிதனைப் படைத்தார். கடவுள் மனிதன் முன்னால் தோன்றி ''நீ பாவங்களைச் செய்யாதே, அப்படி பாவங்களை நீ செய்தாயானால் நீ ஒவ்வொரு முறை பாவம் செய்யும் போதும் வானத்திலிருந்த சிறிதளவு மணல் பூமியில் கொட்டும் கவனமாக நடந்து கொள்" என்று கூறி மறைந்தார்.

இவ்வளவு பரந்த பூமியில் சிறிதளவு மணல் விழுவதால் என்ன கெடுதல் நிகழ்ந்து விடப்போகிறது. அதனால் தன் விருப்பம் போல வாழ்வதால் எந்தத் தவறும் இல்லை என்று நினைத்தான் மனிதன். தன் விருப்பம் போல பாவங்கள் செய்யத் தொடங்கினான் அவன்.

ஒவ்வொரு பாவத்துக்கும் சிறிதளவு மணல் பூமியில் விழத்தொடங்கியது.

மனிதர்கள் இதனைப் பற்றி சிந்திக்காது தொடர்ந்து பாவங்களைச் செய்து வந்ததால் மணல் விழுந்து ஏராளமான பாலைவனங்கள் உருவாகின.

| முக்கிய நிகழ்வுகள் | ஆண்டுகள் |
|---|---|
| 1. கலிங்க மாகனின் படையெடுப்பு | கி.பி.1214 |
| 2. தம்பதெனியா இராசதானியாக்கப்படல் | கி.பி.1232 |
| 3. சந்திர பானுவின் படையெடுப்பு | கி.பி.1247 |
| 4. அஸ்கிரிய பீடம் ஸ்தாபிக்கப்படல் | கி.பி.1312 |
| 5. வாஸ்கொடகாம கள்ளிக்கோட்டையை அடைதல் | கி.பி.1498 |
| 6. லொறன்ஸோ டி அல்மேடா இலங்கைக்கு வருகை | கி.பி.1505 |
| 7. கொழும்பில் போர்த்துக்கேயர் கோட்டை கட்டுதல் | கி.பி.1518 |
| 8. மாயதுன்னன் புவனேகபாகு யுத்தம் | கி.பி.1521 |
| 9. மாயதுன்னை மரணம் | கி.பி.1580 |
| 10. மல்வானை ஒப்பந்தம் | கி.பி.1597 |
| 11. ஒல்லாந்த கிழக்கிந்திய சங்கம் உதயம் | கி.பி.1601 |
| 12. ஒல்லாந்தர் கொழும்பு கோட்டையை கைப்பற்றல் | கி.பி.1656 |
| 13. கண்டியில் நாயக்கர் வம்சம் ஸ்தாபிக்கப்படல் | கி.பி.1734 |

த. சாமினி
ஆண்டு - 09
சின்ன உப்போடை, மட்டக்களப்பு.

# அறிவியல் அரங்கம்

## அசைவம் சாப்பிடும் தாவரங்கள்

பிளாட்டர் வார்ட் என்னும் தாவரம் ஏரி குளங்களில் காணப்படும். இதன் வேர்ப்பகுதியில் நீரின் அடியில் விரிந்து நிற்கும் பைகள் போன்ற அமைப்பு உள்ளது. தண்ணீரில் ஊர்ந்து வரும் சிறு பூச்சிகள் இச் செடிகளின் அருகில் வந்து பையைத் தொட்டவுடன் பைகள் மூடிக் கொள்கின்றன. அதன் விளைவாகப் பூச்சிகளின் நிலை பொட்டலத்தில் மடிக்கப்பட்ட பொருள்களைப் போலாகி விடுகிறது. செடியில் சுரக்கும் சில அமிலங்கள் பையின் உள்ளே மாட்டிக் கொண்ட பூச்சியைக் கரைத்து செரிக்க வைக்கின்றன. 'பிட்சர்' என்னும் ஒரு கொடியினம் மரங்களிலும் புதர்ளிலும் படர்ந்து வளர்கின்றது. இதன் இலைகளில் சுரக்கும் ஒரு வித வாசனையினால் ஈர்க்கப்பட்டு பூச்சிகள் அவற்றின் மீது வந்து அமர்கின்றது. அமர்ந்தவுடன் இலையில் உள்ள வழுக்குத் தன்மையினால் அதன் தண்டின் நடுவில் உள்ள புனல் போன்ற குழாயில் பூச்சிகள் வழுக்கிச் செல்லப்பட்டுக் கொடியின் அடி யில் சென்று அங்கு செரிக்கப்படுகின்றன. இதற்குக் காரணம் இத்தாவரங்களுக்கு தாமாக உணவு தயாரிக்கவோ சத்துக்களை உறிஞ்சவோ இவற்றிற்கு உடல் அமைப்பு இல்லை.

ச.ரமணன்
மெதடிஸ்த மத்திய கல்லூரி

## அறிவியல் உண்மைகள்

**1. இன்று எல்லோரும் Coco -Cola அருந்தியிருப்பீர்கள். இது எவ்வாறு ஓர் சுவையான பானமாகியது:-**

19ம் நூற்றாண்டில் ஆபிரிக்காவில் ஆராய்ச்சியாளர்களின் பொருட்களை சுதேசிகள் காவிச் சென்றனர். காடுகளிடையே நீண்ட தூரம் நடந்த களைப்பு தெரியாமல் இருக்க அவர்கள் Cola விதையை சப்பி உண்டனர். இதனை அவதானித்த சில ஆராய்ச்சியாளர்கள் இதை ஆராய்ந்த போது அவ்விதைகளில் உற்சாகம் தரக்கூடிய காபீன் (Caffeine) என்ற பொருள் இருப்பது கண்டறியப்பட்டது. இதன் பின்னர் கோலா மரத்திற்கு பெரும் மவுசு ஏற்பட்டது. இதிலிருந்து பின் Coco - Cola பானம் உண்டாகியது.

**2. மின்னல் எவ்வாறு உண்டாகிறது:-**

மழை காலங்களிலே மேகங்களில் மின் சக்தி நிறைந்திருக்கும். இரண்டு மேகங்கள் ஒன்றோடொன்று மோதும் போது மின்சக்தி பாய்கிறது. அப்போது கண்ணைப் பறிக்கும் ஒளி உண்டாகிறது. இதனையே நாம் மின்னல் என்கின்றோம்.

**3. கோப்பியை அதிகம் பருகுவதால் யாது நிகழும்?**

கோப்பியில் காபீன் என்ற போதைப் பொருள் இருப்பதால் அதிகம் பருகுவதால் தூக்கமின்மை, நரம்புத்தளர்ச்சி, இதயக்கோளாறு என்பன ஏற்படும்.

**4. நகம் வெட்டும் போது ஏன் வலிப்பதில்லை?**

நகங்கள் இரத்த நாளங்களுடன் தொடர்புடையவனாக இல்லை. நகங்கள் வெட்டும் போது நரம்புத் தொகுதி பாதிப்புறுவதில்லை.

**5. இதயத்துடிப்பு என்றால் என்ன?**

உடல் முழுவதும் இரத்தத்தை செலுத்துவதற்காக இதயத்தின் மேலறைகளும் கீழறைகளும் மாறி மாறி ஓயாமல் சுருங்கி விரிந்து கொண்டேயிருக்கும். இதனையே இதய துடிப்பு என்கிறோம்.

**ஆக்கம்:-**
சு.தர்சினி
தரம் - II G
மட்/வின்சன்ட் ம.தே.பா

### உலகம் நினைவு கூறும் சில ஆண்டுகள் .....

சர்வதேச குழந்தைகள் ஆண்டு -1979
சர்வதேச சமாதான ஆண்டு - 1986
உலக குடியிருப்பு ஆண்டு - 1987
உலக கல்வியாண்டு - 1990
உலக ஆதிவாசிகள் ஆண்டு - 1993
உலக குடும்ப ஆண்டு - 1994
உலகப் பெண்கள் ஆண்டு - 1991 - 2000

த.ரமணன்
32,புனித அந்தோனியார் வீதி,
மட்டக்களப்பு.

### கண்டு பிடியுங்கள் – 13

ஒரு அமைச்சர் வெளி நாடு ஒன்றுக்கு பயணமாக இருந்தார். அவர் தனது வீட்டு காவலாளியிடம் தான் வெளிநாடு போய் வரும் வரை வீட்டினை நன்றாக காவல் புரியுமாறும் உத்தரவிட்டார்.

அன்று வீட்டுக்காவலுக்கு நின்ற காவலாளி ஒரு பயங்கர களவு கண்டார். அமைச்சர் சென்ற விமானம் விபத்துக்குள்ளாகி அமைச்சர் இறந்து போனதாக,

அடுத்த நாள் தான் கன்ட கனவினை அமைச்சரிடம் சொல்லி அவர் பயணத்தை நிறுத்தினார். அவன் கனவு போலவே விமானம் விபத்துக்குள்ளானது. அமைச்சர் உயிர் தப்பினார்.

காவலாளியை அன்றிலிருந்து வேலையை வீட்டு துரத்தியும் விட்டார். ஏன் அவனை துரத்தினார். கண்டு பிடியுங்கள் பார்ப்போம்.

அனுப்ப வேண்டிய முகவரி
கண்டு பிடியுங்கள் -12
தினக்கதிர் வார மலர்.
155, திருமலை வீதி.
த.பெ.எண் - 06.
மட்டக்களப்பு.

கடந்த வாரம் கேட்கப்பட்ட கேள்விக்கான சரியான விடையினை பலர் எழுதியிருந்தனர். அவர்களில் குலுக்கல் மூலம் பரிசுக்காக தெரிவு செய்யப்பட்டவர் அலுவலகத்தில் வந்து பரிசினை பெற்றுச்செல்லலாம்.

பரிசுக்குரியவர்
செல்வி. வி. சுகந்தி,
வை. எம். சீ. ஏ,
மட்டக்களப்பு.


பாராட்டுக்குரியவர்
1. டினோஜினி சகாயநாதன், 36/ புதுமுகத்துவார வீதி. கல்லடி.
2. கே. ஆதித்தன், தாமரைக்கேணி,
3. ஏ.ரீ.எம். நியாஸ், புதிய காத்தான்குடி.
4. எம். றோகனகாந், கல்முனை -2
5. கு. ரமணன், மட்டக்களப்பு.
6. ச. சரண்ராஜ், கல்லடி முகத்துவாரம்.
7. ரவீந்திரன் இந்துஷன் நாவற்குடா கிழக்கு
8. ஸ்ரீ. சோபியவாணி, தாமரைக்கேணி.
9. இவாஞ்சலின் டியுக், சின்ன உப்போடை.

### விஞ்ஞான துளிகள்

1. சாதாரண ஒரு மனிதனின் உடலில் 5l - 6l குருதி காணப்பட வேண்டும்.
2. குருதியின் பெரும் பகுதி நீர் ஆகும். (90% - 92%)
3. குருதியில் 7% வரை குருதிப் புரதங்கள் காணப்படுகிறது.

பி.சுகுணா
52, வாவி வீதி
சின்ன உப்போடை
மட்டக்களப்பு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# ஹிட்லர் மடம்!

"ஹிட்லர் மடம்." சந்திரிகா அரசாங்கம் பாராளுமன்றத் தைத் தடைசெய்து போலி யான மக்கள் வாக்குக் கணிப்பினை நிர்ணயித்ததை எதிர்த்து கொழும்பில் ஆர்ப்பாட்டம் செய்த ஜனங்கள் கோஷமிட்ட வாசகங்கள் இவை. கடந்த வியாழக்கிழமை ஜனநா யகத்தைக் காப்பாற்றத் தென்னிலங்கை கடைசியாக விழித்துக் கொண்டது போலத் தெரிந்தது. போலிஸ் படை கண்ணீர் புகைக் குண்டுகளை வீச வீச, மின்னல் வேகத்தில் அதைச் சட்டெனப் பொறுக்கி பொலிஸுக்குத் திரும்ப வீசிக்கொண்டு மக்கள் அலை அலையாக முன்னேறிக்கொண்டு வந்தார்கள். இவர்களுக்கு எதிர்க்கட்சித் தலைவர்கள் தலைமைத்துவம் வழங்கிக்கொண்டு முன்னால் வந்தனர். இது எமக்கு ஒரு ஜனநாயக வருங்காலத்தில் நம்பிக்கையூட்டும் கண்கொள்ளாக் காட்சியென்றாலும், இதனைப் பற்றித் தமிழ் மக்கள் எவ்வளவு தூரம் புளகாங்கிதமடையலாம் என்பது கேள்விக் குறியாகும்.

**ஆட்சிக்கு வந்தால் ஜனநாயக மீறல்கள்**

தனது ஆட்சிக்காலம் முழுவதும், வடக்கு-கிழக்கி னைப் பொறுத்தவரை, சந்தி ரிகா ஹிட்லர் மடமாகத்தான் இருந்திருக்கின்றார். வடக்கு கிழக்கில் ஜனநாயகம் என்பது ஒட்டு மொத்தமாக இல்லாமல் போய் இருதசாப்தங்களாகி விட்டன. அதிலும் நம் சந்திரிகா அம்மையார் கோலோச்சிய காலம் மிகக் கெடுபிடி மிகுந்த காலமாகும். அப்போதெல்லாம் தமிழ் மக்களின் ஜனநாயகக் கோஷத்துக்குத் துணை வராத எதிர்க்கட்சி, திரும்ப ஆட்சிக்கு வந்து தமிழ் மக்களுக்கு என்னவித தீர்வினைத் தரப் போகின்றது? சிங்கள சமூகத்தின் அரசியல் மட்டங்களிலும் புத்திஜீவிகள் மட்டத்திலும் எந்த அளவில் ஜனநாயகத்தின் கோட்பாட்டு வரைவிலக்க ணங்கள் மட்டுமல்லாது அதன் நடைமுறைப் பிரயோகங்கள் பற்றிய விளக்கங்கள் இருக்கின்றன? எதிர்க்கட்சி யிலிருக்கும்போது ஜனநாயகம் பற்றிப் பேசும் அரசியல் கட்சி ஆட்சிக்கு வந்தவுடன் சில்லறையாக மட்டும் இல்லாது மொத்தமாக , ஒளிவு மறைவு, வெட்கம் அச்சம், இவை எதுவு மின்றி ஜனநாயக உரிமை மீறல்களில் ஈடுபடும் தன்மை தான் என்ன? நாம் தென்னிலங் கையுடன் அரசியல் பண்ண வேண்டியது அவசியமானால் இவை ஆராயவேண்டிய விடயங்களாகும்.

பொதுஜன ஐக்கிய முன்னணி அரசாங்கம் பாராளுமன்றத் தினை இடைநிறுத்தி சர்வஜன வாக்கெடுப்பிற்கு விட்டவுடன், கொழும்பைச் சார்ந்த மத, மற்றும் மனித உரிமைகள் நிறுவனங்கள் இந்த அவசர நிலைமையை ஆராய்வதற்காக கூட்டங்கள் போட்டுச் சுழன்ற வண்ணம் இருந்தன. அதிகார மோகத்துக்காக நாட்டைப் பலி எடுக்காதீர்கள் என்று இரு பக்கத்திலும் கோரிக்கை விடவேண்டும் என்றனர் ஒரு சாரார். எங்கள் அரசியல்வாதி கள் என்று நாம் விடுத்த கோரிக்கைகளுக்கு செவிசாய்த் தார்கள். இது பயனற்றதாகை யால் சர்வஜன வாக்கெடுப்பில் மக்கள் பங்கு கொள்ளக்கூடா தென பிரச்சாரம் செய்வோம் என்றனர் இன்னொரு சாரார். வாக்கு அட்டைகளை பழுது படுத்த மக்களுக்கு அறிவுறுத்தல் செய்வோம் என்றனர் மூன்றாவது தரப்பினர். ஜனாதிப தியின் நடவடிக்கைகளின் சட்ட தாற்பரியங்களை மக்களுக்கு விளங்கப்படுத்து வோம் என்றும் சிலர் கிளம் பினர். நம்பிக்கையில்லாத் தீர்மானத்தை வாபஸ் வாங்கி சமாதானப் பாதையில் ஐக்கிய தேசியக் கட்சி செல்ல வேண்டும் என்றும் பல மூலைகளிலிருந்தும் குரல்கள் எழும்பின. பல விடயங்கள் பேசினாலும் ஒரு விடயத்தை மட்டும் சகலரும் ஒத்துக்கொண்டனர். உடனடி யான நடவடிக்கை யுத்தத்தின் அரசியல் தீர்வாகவே இருக்க முடியும் என்பதேயதுவாகும். இதற்காக, இரு கட்சிகளையும் அரசாங்கத்தின் தீர்வுப்



பொதியை விவாதித்து அங்கீகரிக்கக் கேட்கலாம் என்று அபிப்பிராயப்பட்டனர்.

**தமிழ் பிரச்சினைக்கு சிங்களவர் அரசியல்**

உண்மையில் சமாதானம்தான் நடுநாயகப்பொருள் எனில், தமிழ் மக்களின் பிரதிநிதிகளான விடுதலைப்புலிகள் அதன் வரைபில் பங்கு கொள்ளாத அரசியல் யாப்பினை அங்கீக ரித்து என்ன பயன்? தமிழ் மக்களின் போராட்டத்தின் விளைவாக உருவாகும் அரசியல் யாப்பு சிங்கள மக்க ளால் ஒருதலைப் பட்சமாக வரையப்பட முடியுமா? ஆதனைத் தமிழ் மக்கள் ஏற்றுக் கொள்வார்களா? சிங்களப் புத்திஜீவிகளுக்கு இந்த எளிமையான உண்மை விளங்கவில்லை. காலங்கால மாக எவ்வாறு தமிழ் மக்களைக் கலந்தாலோசியாது அரசியல் தீர்மானங்களை மேற்கொண்டார்களோ அதே முறையில் தான் இன்றுவரை இயங்கிக் கொண்டிருக்கின்றனர்.

சர்வஜன வாக்கெடுப்பிலிருந்து சந்திரிகா பின்வாங்கும் சாத்தியக்கூறு மிகக் குறை வாகவே இருக்கின்றது. அப்படியானால் சிவில் சமூகம் இதனை ஒருவாய்ப்பாகப் பயன்படுத்தலாம். ஆரசியல்வாதிகள் வாசிக்கும் புல்லாங்குழலுக்கு ஆதரவாகவோ எதிராகவோ நாம் ஆடுவதை விடுத்து, அவர்கள் எதைப் பற்றி அக்கறை கொண்டிருந்தாலும் இல்லாவிட்டாலும் நாம் மட்டும் உண்மை, நீதி என்ற அடிப்ப டைக்கொள்கைகளை வகுத்து



அதன்பால் அசையாமல் நிற்கலாம். இவ்வாறு மக்கள் சமூகம் வரையறுப்பதனால்தான் வேண்டிய அரசியல் சீர்திருத் தங்கள் வந்ததேயொழிய, அரசியல்வாதிகளினால் ஒருபோதும் வந்ததில்லை. மக்கள் சமூகம் ஒரு கொள்கையின் பொருட்டு உறுதியாக நிற்க நிற்க, ஆட்சியாளர்களும் வேறுவழி யின்றி அவர்கள் பக்கம் நிற்க நேரிடும்.

**மூல காரணமான இரண்டு அம்சங்கள்**

ஆகவே, சர்வஜன வாக்கெடுப்பை இரு முக்கிய மாற்றத்திற்காக மக்களை உபயோகிக்கும்படி மக்கள் மத்தியில் பிரசாரம் செய்யலாம். 'எமக்கு ஒற்றையாட்சியில்லாத மதச்சார்பற்ற அரசியல் யாப்பு வேண்டும்' என்று நாட்டு மக்களை வாக்களிக்க வைக்கவேண்டும். ஏனெனில் இப்போதைய யாப்பு இலங்கை ஒரு ஒற்றையாட்சி நாடு என்றும், அங்கு பௌத்த மதத்துக்கு முதலிடம் கொடுக்க வேண்டும் என்றும் கோருகின் றது. இந்த இரண்டு உறுப்புரைக ளுமே தமிழ் மக்கள் பிரச்சி னைகளுக்கு மூல காரணமா கும். சகல உறுப்புரைகளும் அடங்கிய சிக்கலானதொரு யாப்பை விட இவை வாக்கெடுப்புக்கு விடக்கூடிய எளிமையான விடயங்களாகும். இவற்றை அகற்ற சிங்கள மக்கள் தீர்ப்புக் கொடுப்பார்க ளேயாகில், அதை வைத்துக் கொண்டு விடுதலைப் புலிகளைப் பேச்சுவார்த்தைகளுக்கு அழைக்கலாம். இப்பொழுது இரு தரப்பினரும் இந்தச் சட்டவரைக்குள் எந்த ஆட்சி ஏற்பாட்டையும் உள்ளடக்க லாம். சமஷ்டி தேவையென் றால் சமஷ்டி ஆட்சி கூட்டுச் சமஷ்டி தேவையென்றால் கூட்டுச் சமஷ்டி ஆட்சி. இந்தவகையில் முரண்பாட்டுத் தீர்வுக்கு இந்த முறை மிகவும் ஏற்புடையதாக இருக்கும். அரசாங்கத்தை வைது அதனை அதிகாரம் கவிழ்க்கும் வெறும் ஆர்ப்பாட்டங்களை விடுத்து மக்களுக்கு அறிவூட்டும் ஆர்ப்பாட்டங்களை முன்னெடுக்கலாம். இப்புதிய சிந்தனைகள் வெகுஜன இயக்கத்தைத் தோற்றுவிக்கும் மூலக்கருவாக மாறும்.

**புத்தி ஜீவிகள் நிலையும் அதுவே**

மேற்கூறிய கருத்துக்கள் சிங்களப் புத்திஜீவிகள் இருந்த ஒரு சபையில் கூறப்பட்டபோது அவை ஏற்றுக்கொள்ளப்பட வேயில்லை என்பது வாசகர்களுக்கு ஒருவேளை ஆச்சரியம் தராத விடயமாக இருக்கலாம். எமக்கு மதச்சார்பற்ற ஒற்றையாட்சி முறையற்ற யாப்பு தேவையா இல்லையா என்று மேலும் அவர்களை நோக்கி சவால் விடுக்கப்பட்டபோது அப்போதும் அவர்கள் உறுதியான பதில் ஏதும் கூறவில்லை. தென்னிலங்கை அரசியல்வாதி களும் அவர்கள் அரசியலும் ஏன் இத்தகையதொரு சீர்கேட்டில் இருக்கின்றது என இப்போது புரியும். ஆங்கு வழிகாட்ட வேண்டியவர்களே வழி தவறி நிற்கின்றனர்.

## வேலிக்கு வீதியும் வேலைச் சமரவும்

*புதுவை இரத்தினதுரை*

தடையெனும் விதியெழுதிப் போவோரே!
எமக்கொரு விடை சொல்வீர்......
'கடை விரித்தீர் கொள்வாரில்லை
எனவே கதவிழுத்துப் பூட்டுங்கள் என
அடுத்தெமெக்கு கட்டளையா இடுவீர்?
தடையெனும் விதியெழுதிப் போவோரே
எமக்கொரு விடை சொல்வீர்
யாரும் குனிந்து கிடந்து தீர்ப்பெழுதாதீர்
இனியாயினும் நிமிர்ந்து பாருங்கள்
முன்னரும் நீரெழுதிய தீர்ப்புகள் பல
மூச்சிழந்து கிடக்கின்றன
இனியும் குனிந்துகொண்டு எழுதாதே
கொஞ்சம் நிமிர்ந்து பாருங்கள்
சாளரங்களைத் திறந்து
எங்கள் சாக்குரலைக் கேளுங்கள்
கதவுகளை அகல விரித்து எங்கள் காற்றையும் சுவாசியுங்கள்
பிணம் எரிக்கும் வாடை அக்காற்றில் இருக்கும்.
கடல்களைக் கடந்து
கண்டங்களைத் தாண்டி
மலைகளையும், நதிகளையும் கடந்துவரும்
எங்கள் காற்றுடனும் கதறல்களுடனும் கொஞ்சம் பேசுங்களேன்.
விழிதிறந்து எங்கள் திசைகளையும் பாருங்கள்,
தீயின் சுவாலையில்
பச்சை மரங்கள் கூட இங்கே பற்றி எரிகின்றன.
பூக்களின் தலையிலும், பொன் வண்டின் நாவிலும்
ஆற்றிலும், அதன் கரை மருங்கிலும் கூட
பற்றியெரிகிறது பாவியரிட்ட பாழ் நெருப்பு
திமிர் பிடித்த தீர்ப்புக்காரரே
தீர்ப்பெழுத உங்கள் சிம்மாசனத்தில் குந்த முன்னர்
நீர்த்துப்போய் கிடக்கும் எங்கள் நிலத்தையும்
கொஞ்சம் நிமிர்ந்து பாருங்கள்.
முற்றம் உழுது போகுறான் ஒருவன்
அவன் காலடியின் கீழே
சிக்குண்டு கிடக்கிறது எம் தேசத்தின் உயிர்.
சாட்டை எடுத்து விளாசுகிறான்.
எம் தேகமெல்லாம் தோலுரிந்து தொங்கிறது.
ஏனடா எரிக்கிறாய் என்றோ
ஏனடா அடிக்கிறாய் என்றோ
அவனை எவனடா கேட்டீர்?
அடியென அவனுக்கு சாட்டை கொடுத்தவனும்
சுடுவென தோட்டா கொடுத்தவனும்
தடையென எமக்குத் தானே விதிக்கின்றனர்.
என்ன கொடுமையடா இது
தாகத்துக்கு தண்ணீர் கேட்டோம் அவன் தரவில்லை
பசித்த வயிற்றுக்கு ஒரு பருக்கை சோறு கேட்டோம்
அவன் தரவில்லை.
சுருண்டு கிடக்க ஒரு துண்டு நிலம் கேட்டோம்
அவன் தரவில்லை
சுற்றம் சூழ மகிழ்ந்திருக்க ஒரு நிலாக்காலம் கேட்டோம்
அவன் தரவேயில்லை.
தீர்ப்பெழுத வருவோரே
இவையெல்லாம் தெரியுமா உமக்கு,
தடை விதிப்போரே
அழுத விழிகளுக்கும் அடித்த கரங்களுக்கும் இடையில்
எழுத முடியுமா சமரசத் தீர்வு?
முன்னரும் நீர் எழுதிய தீர்ப்புகள் பல
மூச்சிழந்து கிடக்கின்றவன்
இன்னுமா தீர்ப்பெழுதும் ஆசையில் திரிகின்றீர்?
எல்லைகளை விழுங்கி
நாடுகளை விழுங்கிச் செரித்து
வானத்தையும், கடலையும் விழுங்கி
விதானத்துக் கோள்களையும்
விழுங்கத் துடிக்கும் விழுங்கிகளுக்கு
உயிர்ப்பின் புள்ளி மேலேன்
இத்தனை கோபம்?
நெஞ்சுக்குழி நிறைய கனவு சுமந்து
நெருப்புக்குளிக்கிறோம்
எமக்கான விதியெழுதும் வலிமை எவருக்குமில்லை.
நாமே நமக்கான நீதிபதிகள்.

நன்றி :- எரிமலை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# போரின் கொடுமையால் கையேந்து நிலைக்கு தள்ளப்பட்டுள்ள எங்கள் தளிர்கள்

இன்றைய நிலைப்பாட்டில் உலகில் சிறுவர் நலன் காத்திட வேண்டும் என்பதற்காக அனைத்துலக நாடுகளில் கைசேர்க்கும் வகையில் சிறுவர் நலன் காத்தலிற்காகவே மிகக் கூடுதலான நாடுகள் உடன்பட்டுள்ளன. இது உலகறிந்த உண்மை. சிறுவர் நலன் ஏன் காக்கப்பட வேண்டும்? இதற்கான சுருக்கமான பதில் அடுத்து வரும் உலகிற்கு நாம் விட்டு வைக்கப் போவது என்ன என்ற கேள்வியே பதிலாகும்.



ஈழப்போர் தொடங்கப்பட்டதிலிருந்து ஈழத்தில் பெருமளவு பாதிப்புக்களை கண்டுள்ளவர்கள் பொது மக்கள். இவர்களில் கூடுதலான சிறுவர்கள் பாதிக்கப்பட்டுள்ளனர் என்பதை புள்ளிவிபரங்கள் மூலம் தற்போதைய சூழ்நிலையில் உறுதியாகத் தரமுடியவில்லை. இதில் வன்னிப்பகுதி சிறுவர்களுடைய நிலையினை பார்ப்போமானால் இச்சிறுவர்கள் கல்வியைத் தொலைத்துள்ளார்கள். கையேந்து நிலையில் உள்ளனர் என்பது கண்கூடு.

வன்னிப்பகுதியில் படையினரின் பல்வேறான படை நடவடிக்கையினால் இடம்பெயர்ந்த மக்கள் தொடர் இடப்பெயர்வுகளைக் கண்டு துன்பங்களை அனுபவித்து வவுனியாவில் பூந்தோட்டம், வேப்பங்குளம், நெளுக்குளம், அடம்பங்குளம், சிதம்பரபுரம், ஆகிய பகுதிகளில் உள்ள நலன்புரி நிலையங்களில் உள்ளனர். இவர்களில் இடைக்கால குடியிருப்புக்கள் அமைக்கப்பட்டு தரணிக்குளம், சுதந்திரபுரம் ஆகிய பகுதியில் கணிசமானோர் குடியமர்த்தப்பட்டுள்ளனர். இவர்களின் நிலமை



நிவாரணங்களினை எதிர்பார்த்து வாழ வேண்டியுள்ளதென்பதை அனைவரும் உணர்வர்.

இப்படியான இடங்களில் போரின் தாக்கங்களையும், அழுத்தங்களையும் தொடர்ச்சியாகக் கண்டு பாதிப்படைந்த மக்களே வாழ்கின்றனர். இவர்களில் சிறுவர்களின் நிலையே மிகவும் கவலைக்கிடமானது. கல்வி கற்கச் செல்லாது ஏதாவது தொழில் தேடி அலைந்து திரிகின்றனர். குளத்தில் மீன் பிடிப்பது, போத்தல் வியாபாரம் செய்வது, கடைகளில் தொழில் புரிவது, கழிவு மரக்கறிகளை எடுத்து விற்பது என சிறு தொழில்களை செய்வதிலும், தேடி அலைவதிலும், அலைந்து திரிகின்றனர். இதை விட இன்னும் மோசமான செயலாக வாரம் தோறும் வெள்ளிக்கிழமைகளில் வியாபார நிலையங்களிற்குச் சென்று பிச்சையெடுக்கின்றனர். இப்படி வீதிகளில் அலைந்து திரிபவர்களின் தொகை நூற்றுக்கணக்காகும்.

இந்தச் சிறுவர்களிடம் அவர்களின் நிலைபற்றி

கேட்டால் கண்ணீர் விட்டழவேண்டும். சிதம்பரபுரத்திலிருந்து பிச்சை எடுப்பதற்காக வவுனியா நகரத்தில் நின்ற சிறுமி ஒருவரிடம் ஏன் இந்த நிலமைக்கு உள்ளாகியுள்ளீர்கள் என சந்தர்ப்பம் ஒன்றின் போது கேட்டேன். அவரிற்கு பதினொரு வயதிருக்கும் அந்த சிறுமி என்னால் கேட்கப்பட்ட கேள்விக்கு முதலில் பதில் கூறாது மிகவும் பரிதாபமாக அழுதுவிட்டு கிளிநொச்சியில் செல்லடிக்குள்ள அப்பா செத்துப் பொயிற்ரேர்.... இப்படிக் கூறி விட்டு

அழுதழுது தனது குடும்ப விபரங்களை கூறிய அவரை அவரின் அருகில் நின்றவர்கள் விபரங்கள் பத்திரிகையில் வெளியிட வேண்டாம் எனக் கூறியதால் அதனைத் தவிர்த்து விட்டு

ஏனைய விடயங்களைப் பார்க்கையில் இலக்கறியா வகையில் கையேந்து நிலையில் உள்ள இந்த சிறார்கள் பற்றி யாராவது கவனம் செலுத்தியுள்ளார்களா?

வவுனியா மாவட்டத்தில் இருபத்தியேழு அரச சார்பற்ற நிறுவனங்கள் இயங்குகின்றன. இவற்றில் இந்தச் சிறார்களின் மீது அக்கறை கொண்டு அவர்களை வழி நடத்துவதற்கு திட்டமிட்ட நடவடிக்கையில் ஒருவருமே ஈடுபடவில்லை. RDF, SEED ஆகியன பாடசாலை செல்லும் மாணவர்களை ஊக்கப்படுத்தும் நோக்கத்துடன் யுனிசெப்பின் ஆதரவில் பாடசாலை சீருடைகளை வழங்கி வருகின்றன. இது ஓரளவு மேலும் பாடசாலை செல்லக்கூடிய மாணவர்களை ஆர்வப்படுத்துவதற்கு உந்து சக்தியாக அமைகின்றது. இதை விட சமூகச் சூழல் பொருளாதார அபிவிருத்தியாளர்கள் (SEED) நிறுவனம் வலுவிழந்த சிறார்களிற்கான கற்பித்தலை வழங்க கல்வி நிறுவனம் ஒன்றினை உருவாக்கி அங்கு

30 சிறார்கள் கற்று வருகின்றனர். அடுத்ததாக அரங்கச் செயற்பாட்டுக்குழுவினர் பாடசாலை செல்லாத சிறார்களை பாடசாலை செல்ல வைப்பதற்கான நடவடிக்கையாக

**கனகரவி**

அரங்காற்றுகையினை மேற்கொண்டு வந்துள்ளார்கள்.

இவை தவிர இந்தச் சிறார்களின் முழு நலனிலும் திட்டமிட்ட முறையில் ஆக்கபூர்வமாக எதனையும் செய்யவில்லை. இதைக் கூறியதுடன் சில அதிகாரிகளும், சில அரச சார்பற்ற நிறுவனங்களில் பணி புரிவோரும் ''பெற்றோரும் அவர்கள் பெற்ற பிள்ளைகளைக் கவனிக்க வேண்டும் அவர்களிற்கு இல்லாத அக்கறையா எமக்கு" எனக் கேட்கின்றனர். இந்தக் கேள்வி கேட்பதற்கு நன்றாகத் தானிருக்கும். போர் ஒரு புறம், அதனால் பாதிப்புக்குள்ளான மக்கள் புறக்கணிக்கப்படுவது ஒரு புறமென தாம் சுயமாக உழைத்து, சுதந்திரமாக வாழ முடியாத ஒரு சூழலுக்குள் சிக்குண்ட மக்களிற்கு நேரடியாக உதவி செய்ய வேண்டும். அப்படி உதவி புரியத்தானே அதிகாரிகளும், அரச சார்பற்ற நிறுவனங்களும், இல்லையெனில் என்ன தேவைக்காக இந்த படையினரின் கட்டுப்பாட்டுப்பகுதிக்குள்ளிருக்கும் வவுனியா மாவட்டத்தின் குறுகிய பகுதிக்குள் 27 அரச சார்பற்ற நிறுவனங்கள் இயங்க வேண்டும்?

இந்தச சந்தர்ப்பத்தில் இந்தச் சிறார்கள் எப்படியெபபடி அலைந்து திரிகின்றனர் என்பதை இங்குள்ள யாரும் அவதானிக்காமல் திரிகின்றனர் எனக் கூற முடியாது. ஆனால் இவர்களை அவதானிப்போர் அவர்களின் வாழ்வினை திட்டமிட்டு அமைத்து கொடுக்க வேண்டும். இல்லையெனில் அவர்களின் நிலை மட்டும் மோசமாகப் போவதில்லை. எதிர்காலத்தில் எமது சமுதாயத்தில் பெரும் பகுதியினரே மிக மோசமான நிலைக்குள் தள்ளப்படுவர். ஆகவே தான் சிறார்களின் நலனில் அக்கறை காட்ட வேண்டும் எனக் கட்டாயப்படுத்தவும், வலிந்து கேட்கவும் வேண்டியுள்ளது.

முன்பொரு தடவை மாதம்தோறும் முழு நிலா நாளன்று வவுனியாவில் நடைபெறும் கலை இலக்கிய நண்பர்கள் வட்டத்தில் இந்தக் கையேந்து நிலையில் உள்ள சிறார்கள் பற்றிய விடயங்களை அலசிப் பேசி ஏதாவது நடவடிக்கையினை மேற்கொள்வதற்கு SEED நிறுவனம் கலை இலக்கிய நண்பர்கள் வட்டத்துடன் இணைந்து மதத் தலைவர்கள், அரச சார்பற்ற நிறுவனங்களின் பிரதிநிதிகள் ஆகியோரை அழைத்திருந்தது. இதன் போது பலர் கலந்து கொண்டு சிறுவர்களது பிரச்சினை, நலன் காத்தல் போன்றவற்றினை பேசினார்கள். அவ்வளவு தான் பின் எந்த நடவடிக்கையும் எடுக்கப்பட்டதாக இல்லை.

அண்மையில் ஜனாதிபதியவர்கள் தலைநகரில் சிறுவர்கள் பற்றி கவனம் செலுத்த வேண்டும் என அக்கறையுடன் பேசியிருந்தார். எல்லோரும் அக்கறையுடன் பேசுகின்றார்கள். இணைந்த செயற்பாடு தான் முடியாமல் உள்ளது.

□□□

## மேய்ப்பரும் வெள்ளாடும்

சொர்க்கம் லோகம் சலித்தத னாலே
சோர்வினை யடைந்த கௌதம புத்தன்
சந்தகன் தன்னை சடுதியாய் அழைத்து
சுந்தர விமானம் கொண்டு வாவென்றான்.

அந்தர வானில் எழுந்தது விமானம்
சிந்தனைக் கடலில் ஆழ்ந்தான் புத்தன்

நீண்ட தொலைவு பறந்தது விமானம்
கண்ணின் முன்னே எழுந்ததோர் கிரகம்

திடுக்கென நினைவு திரும்பிய புத்தன்
அடுத்த கிரகம் எதுவெனக் கேட்டான்.
பூமிதான் அந்தக் கிரகம் என்று
சாமி புத்தனின் வலவன் சொன்னான்

தேடி பூமிக்குப் போதித்த ஞானம்
நாடி நலந்தரும் வண்ணம் காண
விரும்பிய புத்தன் சந்தகன் காதில்
நிறுத்து பூமியில் விமானத்தை என்றான்.

வேற்றுருக் கொண்டு பூமியில் இருவரும்
மற்றவரோடு கலந்தே அலைந்தனர்.
பார்க்கு மிடமெல்லாம் அரசு விருட்சம்
சேர்ந்தே இருக்கும் உயர்ந்த விகாரம்.

காதில் மோதும் புத்தம் சரணம்
காவி உடையில் துறவின் ஊர்வலம்
புத்தனின் முகத்தில் பூரண திருப்தி
சித்தத்தில் கூடும் ஒருவித நெகிழ்ச்சி

தெள்ளென மேலே விரிந்ததோர் காட்சி
வெள்ளா டொன்றை வருத்தினர் மேய்ப்பர்
அல்லல் - உற்றுத் துடித்த பெண்ணாடு
வல்லோர் தம்மை அபயம் என்றழுதது.

மனிதர்கள் எல்லாம் செவிடராய்க் குருடராய்
மனிதம் மரிப்பதைப் பார்த்தே நடந்தனர்
சாதுக்கள் கூட சாந்தமாய் இருந்தனர்
பாதுகாக்க எவருமே வர வில்லை.

தன்னிலை மறந்து தருமன் கேட்டான்
ஏனிழி நிலைமை தடுப்போர் இலையா
மற்றோர் மனிதன் மெதுவாய் மொழிந்தான்
வேற்று மந்தையின் வெள்ளா டிதுவென.

கல்லாய்ச் சமைந்தான் கௌதம புத்தன்
சொல்லவோர் வார்த்தை புலப்படவில்லை.
பட்ட துன்பம் பாழா கியதே
எட்டி நின்று சிரித்தது ஞானம்.

**சோ. அருளானந்தன்**
**புதிய கல்முனை வீதி,**
**கல்லடி.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஊர்வலம்..........

## கடல் வழி வந்த சீர் பாத தேவியின் தரிசனத்தால் அரச குலக் கோட்டமாக மகிமை பெற்ற திருப்பதியாம்


# வீரமுனை

(சென்றவாரத் தொடர்.....)

சீர்பாத குலத்தவருக்குள் ஏற்பட்ட தகராறு காரணமாக மா.தோ. வேலுப்பிள்ளை அவர்களும் சீர் பாத குலத்தைச் சேர்ந்த முன்பு ஆதரவு அளித்த ஒன்பது (09) குடியினரும் சேர்ந்து பிரசித்த நொத்தாரிஸ் க.சந்திரசேகரி அவர்களால் 06.10.1952 இல் எழுதப்பட்ட 2816 ஆம் இலக்க உறுதியால் கா.க. பழனியாண்டி அவர்களை வண்ணக்கர் பதவியிலிருந்தும் நீக்கி விட்டனர். இதனால் சீர்பாத குலத்தவர்களுக்குள் ஏற்பட்ட கலவரங்கள் ஆலய நிர்வாகத்திலும் பல தாக்கங்களினை ஏற்படுத்தின. 1954ல் வீரமுனைக் கிராமமே எரியுண்டது. குடிமக்கள் பலரும் மல்வத்தை, வளத்தாப்பிட்டி, வீரச்சோலை, காரைதீவு, கல்முனை, பாண்டிருப்பு, அட்டப்பள்ளம், திருக்கோயில் முதலிய இடங்களுக்கு புலம் பெயர்ந்தனர். பின்னர் இரு பகுதியினரும் ஒன்று சேர்ந்து ஆலயத்தைப் பரிபாலித்து வந்தனர். 02.07.1962ல் மா.தோ.வேலுப்பிள்ளை அவர்கள் மரணமடைந்தார். செட்டி குலத்தவரின் வண்ணக்கராகிய சி.கே.பழனியாண்டியே ஆலய நிருவாகம் முழுவதுக்கும் பொறுப்பாக இருந்தார்.

### வழக்கு தாக்கல்

இக் காலத்தில் ஆலயக் காணிகளையும், சாதிக் காணிகளையும் ஒற்றி வைத்தும், விற்றும் தம் விருப்பப்படி நடந்து வந்ததாக ஆலய வரலாறு சாட்சி பகருகிறது. கோயில் சொத்துக்கள் பாரதீனப் படுத்தப்பட்டதன் காரணமாக இரு இனத்தாருக்கும் இடையே ஏற்பட்ட கருத்து வேறுபாட்டால் 1964 ஆம் ஆண்டு 2357 ஆம் இலக்க நானாவித வழக்கு மட்டக்களப்பு மாவட்ட நீதி மன்றில் பழனியாண்டிக் கெதிராக தொடரப்பட்டது வழக்காளிகளாக சீர் பாதகுலத்தவரில் வேலுப்பிள்ளை சாமித்தம்பியும் மற்றும் (09) பேரும் செட்டி வேளாளரில் வேலுப்பிள்ளை தங்கராசாவும் மற்றும் ஒன்பது பேரும் செயற்பட்டனர். கோட்டு தீர்ப்பு வழங்கும் வரையும் மல்வத்தைக் கிராம சேவகரும் பதிவாளருமான சிந்தாத்துரை செல்லத்துரை நீதி மன்றம் **(receiver)** பராமாரிப்பாளராக நியமனம் செய்தது நிதீமன்றம் 31.12.1975 வரை ஆலய வருமானத்தை சேகரித்து வழக்காளிகளின் சம்மதத்துடன் ஒற்றி வைத்த காணிகளை மீளப் பெற்றது. அத்துடன் ஆலய புணர்த்தாபன வேலைகளும் ஆரம்பிக்கப் பட்டன.



### தீர்ப்பு

1.1.1976 தொடக்கம் 2357 ஆம் இலக்க நானாவித வழக்கின் தீர்ப்பின் படி நம்பிக்கைப் பொறுப்பாளர் சபை நியமிக்கப்பட்டு செயல்பட தொடங்கியது. இச் சபையின் கால எல்லை 3 வருடங்களாகும். பின்பு சந்ததியார் விரும்பியபடி தெரிவு செய்யப்படுவர். நீதி மன்றம் பூரண விசாரணையின் பின்னர் ஆலய நிர்வாகத்திலும் சொத்துக்களிலும் (அசைவுள்ள, அசைவற்ற ) ஐம்பதுக்கு ஐம்பது வீதம் சமத்துவ உரிமையை வழங்கியது. இதனால் ஆலய சொத்துக்கள் தனியொரு பிரிவினராலோ அல்லது தனி நபராலோ பாரதீனப்படுத்த முடியாத நிலை ஏற்படுத்தப்பட்டது.

(தொடரும்...)

---

கவிதைப் போட்டி முடிவுகள், கதிரவன் பதில்கள் தவிர்க்க முடியாத காரணத்தினால் இன்று வெளிவரவில்லை. அடுத்த வாரவெளியீட்டில் வெளிவரும்.



இப்படத்தை பிரதிபலிக்கும் கவிதையினை எழுதி அனுப்புங்கள். அனுப்பும் கவிதைகள் வார்த்தைகளில் எண்ணிக்கையில் அதிகம் இல்லாமல் தபாலட்டையில் மட்டும் பதிவு செய்து அனுப்புங்கள். சிறந்த கவிதைக்கு 50 ரூபாய் பணப்பரிசு வழங்கப்படுவதுடன் அக் கவிதையும் பிரசுரிக்கப் படும். மேலும் உங்களுடைய கவிதைகளை 27ம் திகதிக்கு முன்னர் கிடைக்கக் கூடியதாக அனுப்பி வைக்கவும்.

அனுப்ப வேண்டிய முகவரி:-
கவிதைப்போட்டி - 11
தினக்கதிர் வாரவெளியீடு
த.பெ.எண் :- 06
மட்டக்களப்பு

---

# கீதையின் எதிரொலி

**க. தங்கேஸ்வரி**
**கலாசார உத்தியோகத்தர்.**

**''பரிக்ராணாய ஸாதூர்நாம்**
**விநாசாய ஸதுஷ்க்ருதாம்**
**தர்ம ஸம்ஸ்தாபனாக்தாய**
**சம்பவாமி யுகே யுகே ''**

அனைவருக்கும் தெரிந்த இக் கீதைச் சுலோகம். இந்திய தத்துவ ஞானத்தின் வித்து எனலாம். இது உலகம் முழுவதிலுமுள்ள தத்துவ ஞானிகளின் கவனத்தை ஈர்த்த பெருமைக்குரியது. ''உலகில் தர்மம் அழிந்து அதர்மம் ஓங்கும் போது. துஷ்ட நிக்ரக சிஷ்ட பரிபாலனம்செய்து. தருமத்தை நிலை நாட்டுவதற்காக காலத்துக்கு காலம் நான் பூமியில் அவ தரிக்கிறேன். என கிருஷ்ண பரமாத்துமா பகவத்கீதையில் இவ்வாறு அர்ஜீனனுக்கு கூறுகிறார்.

வியாசர் இயற்றிய மாக பாரதத்தில் இடம் பெறும் பகவத் கீதை யுத்தகாலத்தில் கிருஷ்ணனுக்கும் அர்ஜீனனுக்கும் இடையே நடைபெறும் உரையாடல் வடிவில் அமைந்துள்ளது. இதை எப்படி தெய்வத்தின் குரலாக ஏற்பது? வியாசருடைய எண்ணங்கள் தானே இவை என இன்று மெத்தப் படித்த அறிவாளிகள் கேட்கலாம் ஆனால் தெய்வத்தின் குரலே ஞானிகளின் வாயிலிருந்து வெளிப் படுகிறது என்பது வரலாற்று உண்மை.

உலகவரலாற்றை உற்று நோக்கினால் மேற்படி கீதை வாசகத்தின் உண்மையை நாம் உணர்ந்து கொள்ளலாம்.

பகவத் கீதை உலகில் பல மொழிகளில் மொழி பெயர்க்கப் பட்டிருக்கிறது. ஒரு சமயத்துக்குரிய கோட்பாடுகள் என்றில்லாமல் உலகம் அனைத்துக்கும் பொதுவான தத்துவங்கள் இதில் கூறப் பட்டிருப்பதால் உலகப் பொது மறையாக இதைக் கொள்ளலாம் என்பது சுவாமி விவேகானந்தர் போன்ற மெஞ்ஞானிகளின் கருத்து ஆகும் அவ்வாறே அது ஆகிக் கொண்டிருக்கிறது.

பகவத் கீதை கி.பி 1785ல் சாள்ஸ் வில்கின்ஸ் என்பவரால் முதல் முதலில் ஆங்கிலத்தில் மொழி பெயர்க்கப் பட்டது. ஆங்கில தத்துவ ஞானிகளான எமர்சன் மற்றும் புதுக்கவிதையின் தந்தையாகிய வோல்ட் விற்மன் முதலியோரால் பகவத் கீதைச் சிந்தனைகள் எதிரொலிக்கப்படுகின்றன. உதாரணமாக வோல்ற் விற்மனுடைய எனது பாடல் **(song of myself)** என்ற கவிதையில் மேற்குறித்த பகவத் கீதைச் சுலோகம் பின்வரும் வடிவம் பெற்றுள்ளது.

**I rise teen age to age**
**and take ------ shape**
**and move a man with man**
**succoring the good.**

( பார்க்க- சுவாமி விவேகானந்தர் சிகாகோ சொற் பொழிவுகள் பெசுமணி பக்கம் - 47) இவ்வாறு உலக தத்துவ ஞானிகள் அனைவரது கவனத்தையும் ஈர்க்கும் சிந்தனைக்குச் சொந்தக் காரர்கள் நாம் மக்களுக்காக ஆத்மீக வழிகளைப் போதிக்கும் வேதங்கள், உபநிடதங்கள், தேவார திருப்பதிகங்கள், திருப்பாசுரங்கள் இந்து சமயத்தில் உள்ளன. ஆழ்வார்கள், நாயன்மார்களும் நமக்கு அருகிலேயே இருக்கிறார்கள். அவர்கள் வாயிலிருந்து உதித்த தத்துவ முத்துக்கள், ஆணடவன் உதிர்த்த முத்துக்களாகும். இவற்றின் பெருமையை, தத்துவ ஆழத்தை உணர்ந்து கொள்ளாமல் அந்நிய சிந்தனைகளை தூக்கிப் பிடிப்பது எவ்வளவு மடமை.



உயர் கல்விப் பீடங்களில் இடம் பிடித்துக் கொண்டு பட்டதாரிகளை உருவாக்குவோர் இது பற்றி ஆழமாகச் சிந்தித்தல் அவசியம்.

எண்ணம், சொல், செயல் இம் மூன்றிலும் சத்தியத்தைக் கடைப் பிடித்து நாம் ஒழுகுவோம். அப்படிச் செய்யாதவரை மேற்படி சிந்தனைகளைப் பற்றிப் பேசுவதற்கு நாம் சிறிதும் அருகதை உடையவர்களாக மாட்டோம்.

---

# 3ம் மாத நினைவஞ்சலி

| மலர்வு | | உதிர்வு |
|---|---|---|
| 24 - 09 - 1928 |  | 22 - 04 - 2001 |

## திருமதி.கனகம்மா சாம்பசிவம்

**(இல,12 புகையிரத குறுக்கு வீதி, மட்டக்களப்பு)**
**தொலைபேசி இல:- 065-25951**

அன்போடும் பாசத்தோடும் வளர்த்து நல்வழி
காட்டிய தெய்வமே!
இல்லறம் என்னும் நல்லறத்திற்கு
இணையாக வந்த இனிய விளக்கே!
அன்பும் பண்பும் கொண்ட அணையாத ஜோதியே!
ஆசைக்கும், பாசத்திற்கும், அருமைச்
செல்வங்களை ஈன்றெடுத்து
பார்போற்றும் உத்தமர்களாக வளர்த்த அன்பு
அம்மாவே!
மலர்ந்த முகத்துடன் விருந்தோம்பல் செய்து
இல்லறம் என்னும்
நல்லறத்தை இனிதே நடத்திய தெய்வமே!
உங்களை இழந்து மாதம் மூன்று ஆனதம்மா.
ஆனால்
உங்கள் நினைவுகள் எங்கள் இதயங்களில்
நீங்காது
நிலைத்திருக்குதம்மா. சிரித்த முகத்தோடு நீ
மீண்டும் வருவாய்
என்று ஏங்கித் தவிக்கின்றோம்.

**என்றும் உங்கள் நினைவுடன் உங்களது ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.**

உங்கள் பிரிவால் துயருறும் கணவர் செல்லத்துரை சாம்பசிவம் (அகில இலங்கை சமாதான நீதிவானும், ஓய்வுபெற்ற மட்டக்களப்பு க்ச்சேரி நிருவாக உத்தியோகத்தர்) பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள், உறவினர்கள்.

**தகவல்:-**
**சாம்பசிவம் நடேசன் சண்முகரெட்ணம் (மகன்)**
**(அமெரிக்கா)**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இனப்பிரச்சினைக்குத் தீர்வு தரக்கூடியதாக அரசமைப்பு இருக்க வலியுறுத்தினாராம் ரணில்

(கொழும்பு)

**இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்காக விடுதலைப் புலிகளுடன் பேச்சை ஆரம்பிக்கும்படி அண்மையில் ஜனாதிபதியை இரு தடவைகள் சந்தித்த சமயம் அவரிடம் கோரியதாக ஐ.தே.கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.**

தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்களுடன் நேற்று முன்தினம் நடத்திய கலந்துரையாடலின் போதே ரணில் இத் தகவலை வெளியிட்டார்.

அடுத்த மாதம் 21 ஆம் திகதி இடம் பெறவுள்ள சர்வஜன வாக்கெடுப்பின் போது அரசுக்கு எதிராக வாக்களிப்பதென்று எதிர்க் கட்சிகள் எடுத்துள்ள முடிவு குறித்து ரணில் விக்கிரமசிங்க தமிழ்க் கட்சிப் பிரதிநிதிகளுடன் கலந்துரையாடினார்.

"அண்மையில் இரு தடவைகள் ஜனாதிபதியைச் சந்தித்தேன். அந்த வேளையில் அரசமைப்பு மாற்றம் இனப்பிரச்சினைக்குத் தீர்வைத் தரக்கூடியதாக இருக்க வேண்டும் என்பதையும் விடுதலைப் புலிகளுடன் பேச்சை ஆரம்பிக்க வேண்டும் என்றும் அவரிடம் வற்புறுத்தினேன்" என்று ரணில் அப்போது தெரிவித்தார். அரசமைப்பு மாற்றம் வெறும் அதிகார மாற்றங்களுக்காகச் செய்யப்படுவதால் பயனில்லை என்றும் ரணில் அவர்களிடம் கூறினார்.

## சிவாஜிகணேசன்....

நடிப்புத்துறைக்கு வந்த போது சோபிக்காததால் சிவாஜி பிலிம்ஸ் நிலையத்தை நடத்த இன்றைய மகன் பிரபு இளைய திலகம் என்ற பெயரில் திரையுலகில் ஜொலித்து வந்தார். 'வீர சிவாஜி' என்ற நாடகத்தில் நடித்த நடிப்பைப் பார்த்து விழும்புறம் சின்னையா கணேசன் என்றிருந்தவரை பெரியார் ராமசாமி 'சிவாஜிகணேசன்' என்ற பட்டம் சூட்டினார்.

சில வருடங்களுக்கு முன் கலைஞர் கருணாநிதியின் பவள விழாக்கொண்டாட்டத்தில் கலந்து கொண்டு சிவாஜியை வாழ்த்திய பின் கலைஞரும், சிவாஜியும் உணர்ச்சிவசப்பட்டு ஆரத்தழுவி கண்ணீர் விட்ட காட்சியைக்கண்டு மக்கள் திரளே கண்ணீர் விட்டது.

முதலில் தி.மு.க கழகத்திலிருந்து பின்னர் காங்கிரசில் காமராஜருடன் இணைந்து தொடர்ந்து தனியாகத் தமிழ்க் கட்சியையும் தொடர்ந்து பின்னர் அரசியலிலிருந்து ஒதுங்கிக்கொண்டவர் சிவாஜி கணேசன்.

சிவாஜி அவர்கள் தி.மு.க.வில் இருந்து பிரிந்ததாக அறிஞர் அண்ணாவிடம் சொன்ன போது தம்பி எங்கிருந்தாலும் வாழ்க என அண்ணா தெரிவித்திருந்தார்.

இவரது மறைவால் தமிழ் திரையுலகமே சோபை இழந்து தவித்து நிற்கின்றது.

## மூன்று வருடத்தில் 2123 சிறுவர்கள் பலி

(வவுனியா நிருபர்)

கடந்த மூன்று வருடகாலத்தில் 2123 சிறுவர்கள் வடக்கில் போர் நெருக்கடியில் சிக்கிப் பலியாகியுள்ளதாக சிறுவர்நலன் பேணும் நிறுவனம் ஒன்றின் ஆய்வறிக்கை தெரிவிக்கின்றது.

முல்லைத்தீவில் 543, கிளிநொச்சியில் 894, யாழ் மாவட்டத்தில் 411, வவுனயா, மன்னார் மாவட்டத்தில் 275 சிறுவர்கள் பலியாகியுள்ளனர்.

## சர்வஜன வாக்கெடு........

நிதி தேர்தல் திணைக்களத்திடம் இல்லை என்றும் - எனவே நாடாளுமன்றத்தில் குறைநிரப்புப் பிரேரணை ஒன்றைச் சமர்ப்பித்தே இதற்கான நிதியைப் பெறவேண்டியிருக்கும் என்றும் - அந்த வட்டாரங்கள் சுட்டிக்காட்டுகின்றன.

## சர்வஜன வாக்................

75வது பிரமாணத்தின் கீழ் நடுநிலை வகிக்கும் கட்சிகள் என தெரிவித்துள்ளார். பிரதான கட்சிகளான பொதுஜன ஐக்கிய முன்னணி, சுதந்திரக்கட்சி, ஈ.பி.டி.பி மக்கள் ஐக்கிய முன்னணி, கம்யூனிஸ்ட் கட்சி உட்பட பதினாறு கட்சிகள் தமது ஆதர்வைத் தெரிவித்துள்ளன. ஐக்கிய தேசியக்கட்சி, மலையக மக்கள் முன்னணி, த.விகூ, சிஹல உறுமய, ஸ்ரீ.மு.கா. உட்பட பதினேழு கட்சிகள் தமது எதிர்ப்பையும் தெவித்துள்ளன.

அகில இலங்கைத் தமிழ் காங்கிரஸ், முஸ்லிம் ஐக்கிய முன்னணி, ரெலோ, நவசமாஜக் கட்சி, பிஜைகள் முன்னணி, உட்பட பதின்மூன்று கட்சிகள் எவ்விதமான அறிவித்தலையும் விடுக்கவில்லை. இது சம்பந்தமாக சகல கட்சிகளின் செயலாளர்களையும் தேர்தல் ஆணையாளர் அழைத்து எதிர்வரும் செவ்வாய்க்கிழமை பேச்சுவார்த்தை ஒன்றை நடத்தவுள்ளதாகவும் தேர்தல் திணைக்களம் தெரிவித்துள்ளது. இப்பேச்சுவார்த்தையின் போது பிரசாரங்களுக்காக ஊடகங்களுக்கு ஒதுக்கப்படும் நேரம் குறித்தும் ஆராயப்படுமெனவும் தேர்தல் திணைக்களம் வெளியிட்டுள்ள அறிக்கையில் குறிப்பிட்டுள்ளது.

## மட்டக்களப்பு...............

நிலையத்தைச்சேர்ந்த பந்துல என அடையாளம் காணப்பட்டுள்ளது. மட்டக்களப்பு கல்முனை பிரதான வீதியில் உள்ள சிவானந்தா வித்தியாலயத்திற்கு அண்மையில் கடமையில் இருந்தவேளை சைக்கிளில் வந்த ஒருவர் இவரைச் சுட்டுவிட்டுச் சென்றதாகத் தெரிவிக்கப்படுகிறது. கழுத்தில் காயமடைந்த அவர் ஸ்தலத்திலேயே பலியானார். சடலம் மட்டக்களப்பு பொது வைத்தியசாலைக்கு எடுத்து செல்லப்பட்டுள்ளது. சம்பவம் நடை பெற்ற இடத்திலிருந்து 200மீற்றருக்கு அப்பால் மஞ்சந்தொடுவாய் பொலிஸ் காவல் நிலையம் உள்ளது. சம்பவம் நடைபெற்ற சில நிமிடநேரத்தில் அங்கு விரைந்த படையினர் அப்பகுதியில் தீவிர தேடுதலை நடத்தினர்.

# பத்திரிகையாளர் மீது பாதுகாப்புப் படையினரின் தலையீடு

## ஜனாதிபதிக்கு கிழக்கிலங்கை செய்தியாளர் சங்கம் புகார்

(மட்டக்களப்பு)

பத்திரிகையாளர் மீது மட்டக்களப்பில் அதிகரித்து வரும் தலையீடு பற்றி கிழக்கிலங்கை செய்தியாளர் சங்கம் ஜனாதிபதிக்கு அனுப்பிவைத்துள்ள கடிதத்தில் புகார் தெரிவித்துள்ளது.

கிழக்கிலங்கை செய்தியாளர்களாகிய நாம் பல இன்னல் களுக்கு மத்தியிலும் எங்கள் கடமைகளை ஆற்றி வருகின்றோம்.

இதுவரை பாதுகாப்புப் படைகளிடமிருந்து எமக்குப் பெரிய மிரட்டல்களோ தலையீடுகளோ இருந்ததில்லை. அண்மைக் காலத்தில் பாதுகாப்பு படைகளிடமிருந்து மட்டக்களப்பிலுள்ள செய்தியாளர்களுக்குத் தலையீடு அதிகரித்து வருவதை அவதானிக்கிறோம்.

பத்திரிகையாசிரியர் சங்கத்தின் இரண்டாயிரமாவது ஆண்டு விருது பெற்றவரும் மதிப்பிற்குரிய செய்தியாளருமாகிய ஜி. நடேசன் கடந்த 17 ஆம்திகதி மட்டக்களப்பு மாவட்ட இணைப்பதிகாரியினால் அழைக்கப்பட்டார், அந்தச் சந்திப்பின போது அந்த அதிகாரி நடந்து கொண்ட முறை முன்னர் இருந்த இணைப்பதிகாரியின் அணுகுமுறைக்கு முற்றிலும் மாறுபட்டதாக இருந்தது.

விடுதலைப்புலிகளுக்கு ஆதரவாக நடேசன் இருப்பதாக குற்றஞ்சாட்டப்பட்டதுடன் அவர் புகைப்படங்களும் எடுக்கப்பட்டார்.

இந்தச் செயல் பத்திரிகையாளர் சமுதாயத்தின் மீதான தலையீடாகவே நாங்கள் கருதுகின்றோம். இதில் வேடிக்கை என்னவென்றால் கட்டுப்பாடற்ற பகுதிக்குப் பத்திரிகையாளர்கள் சென்று வருவதற்கு விதிக்கப்பட்டிருந்த தடை தளர்த்தப்பட்டதாக அறிவிக்கப்பட்ட அன்று தான் இந்தச் சம்பவமும் நடந்தன.

எனவே இது போன்ற தலையீடுகள் பத்திரிகையாளர்கள் மீது இனிமேலும் தொடராமல் உரிய நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுக் கொள்வதாக கிழக்கி லங்கைச் செய்தியாளர் சங்கம் ஜனாதிபதியை கடிதமூலம் கேட்டுள்ளது.

## ஆர்பாட்டத்தில்............

கைதுசெய்து அடையாள அணிவகுப்புக்கு நிறுத்துமாறு மாஜிஸ்ரேட் நீதிவான் உத்தரவிட்டிருக்கிறார். இதற்கிடையில் ஆர்ப்பாட்டங்களின் மத்தியில் பொலீசார் கத்திகளை சிவில் உடையில் இருந்தவர்களிடம் கொடுத்தது வீடியோ படங்களில் பதிவாகி உள்ளது. டாக்சிகளில் இருந்து வயதான பெண்களை வெளியே இழுத்து குண்டாந்தடியால் பொலீசார் தாக்கியதும், வீடுகளின் மீது கண்ணீர்புகை சிலின்டர்களை பொலீசார் எறிந்ததும் வீடியோக்களில் பதிவாகி உள்ளன. பொதுமக்கள் மீதும் எதிர்க்கட்சித் தலைவர் மீதும் பொலீசார் கண்ணீர்புகை, ரப்பர்குண்டு தாக்குதல்களை நடத்தியபோது அதற்கு உத்தரவிட்டுக் கொண்டிருந்த ஜனாதிபதியின் பாதுகாப்பு பிரிவு அதிகாரிகளை தாம் பார்த்ததாக கண்கண்ட சாட்சிகள் தெரிவித்துள்ளதுடன் இவை தமது வீடியோக்களில் பதிவாகி இருப்பதாக தனியார் தொலைக்காட்சி படப்பிடிப்பாளர்களும் தெழிவித்துள்ளனர். அதே வேளை சர்வதேச மன்னிப்பு சபையும் இத்தகைய சம்பவங்களை சுட்டிக்காட்டி பொலீசாரின் அத்துமீறிய செயல்களை கண்டித்துள்ளதுடன் கருத்து சுதந்திரமும் ஒன்று கூடுவதற்கான சுதந்திரமும் மீறப்பட்டுள்ளது

# எதிரணி ஆர்ப்பாட்டங்களில் ஜே.வி.பி.யும் பங்குபற்றும்

(கொழும்பு)

அரசுக்கு எதிராக எதிர்க்கட்சிகள் முக்கிய நகரங்களில் தொடர்ந்து நடத்தவிருக்கும் ஆர்ப்பாட்டப் போராட்டங்களில் ஜே.வி.பியும் பங்கு கொள்ளும். ஐ.தே.கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவும் ஜே.வி.பி. நாடாளு மன்ற உறுப்பினர் நந்தன குணத்திலகவும் வெள்ளிக்கிழமை நடத்திய பேச்சுக்களின் பின்னர் ஜே.வி.பி. இந்த முடிவை எடுத்துள்ளது.

ஜனநாயகத்தைக் கட்டியெழுப்ப அரசுக்கு எதிராகப் போராட்டம் நடத்த வேண்டிய கட்டாய சூழ்நிலை ஏற்பட்டுள்ளது என்று ஜே.வி.பி. தெரிவித்துள்ளது. இதேவேளை -அடுத்து நடத்தவிருக்கும் போராட்டங்கள் குறித்து ஆராய்வதற்காக வெள்ளி மாலை கொழும்பு நூலக கேட்போர் கூடத்தில் கூட்டம் ஒன்று ஏற்பாடு செய்யப்பட்டது. இந்தக் கூட்டத்தில் ஐ.தே.க. தலைவர் ரணில் விக்கிரமசிங்க, தமிழர் விடுதலைக் கூட்டணி சிரேஷ்ட உப தலைவர் வீ.ஆனந்தசங்கரி மற் றும் ஜே.வி.பி., முஸ்லிம் காங்கிரஸ் ஆகிய கட்சிகளின் பிரதிநிதிகளும் கலந்து கொண்டனர். கொழும்பு, கண்டி, அநுராதபுரம் ஆகிய நகரங்களில் ஆர்ப்பாட்டங்களை நடத்துவது என்றும் - முதலில் கண்டியில் அடுத்தவாரம் பெரும் ஆர்ப்பாட்டம் ஒன்றை நடத்துவது என்றும் - அங்கு முடிவுசெய்யப்பட்டுள்ளது.

# திருமலையில் மோதல் குடும்பப் பெண் பலி

(திருமலை நிருபர்)

திருமலை அன்புவழிபுரப் பகுதியில் சனிக்கிழமை அதிகாலை படையினருக்கும் விடுதலைப்புலிகளுக்குமிடையில் மோதல் இடம் பெற்றதாக தெரிவிக்கப்படுகின்றது.

இத்துப்பாக்கிச்சூட்டில் ஆண்டான்குளம் பகுதியில் உள்ள 41 வயதுடைய குடும்பப் பெண் ஒருவர் பலியாகியுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது. இதேவேளை நேற்று அதிகாலை அலஸ்தோட்டம் படையினரால் சுற்றிவளைக்கப்பட்டு தேடுதல் நடத்தப்பட்டது.

# வட இலங்கை பத்திரிகையாளர் சங்கம் மகஜர்

(யாழ் நிருபர்)

லண்டன் ஐ.பி.சி. நிறுவனத்தின் செய்தியாளரான தவச்செல்வம் சாவகச்சேரி நீதிமன்ற வளவில் வைத்து மிருசுவில் கொலை வழக்கின் முதலாவது எதிரியான இராணுவச் சிப்பாய் ஒருவரால் தாக்கப்பட்டதையும் மட்டக்களப்புச் செய்தியாளர் ஜி.நடேசன் இராணுவத்தினரால் எச்சரிக்கப்பட்டதையும் கண்டித்து வட இலங்கைப் பத்திரிகையாளர் சங்கம் தகவல், ஊடகவியல் அமைச்சருக்கு தொலைநகல் செய்தி ஒன்றினை அனுப்பி வைத்துள்ளது.

"ஊடகவியலாளர் தவச்செல்வம் தாக்கப்பட்டது இராணுவத்தினரின் வெளிப்படையான மனித உரிமை மீறல்களையும் அவர்கள் நீதிமன்றத்தையே உதாசீனம் செய்யும் தன்மையையும் வெளிப்படுத்துகிறது. அன்று எமது செயலாளர் நிமலராஜன் சுட்டுக் கொல்லப்பட்டார். இன்று எமது சகாக்களில் ஒருவர் நையப் புடைக்கப்பட்டுள்ளார். இவை யாழ்ப்பாணத்திலுள்ள செய்தியாளர்களை அச்சுறுத்தி பெட்டிப்பாம்பாக முடங்கி கிடக்கவைக்கும் செயல் எனவும் கருதுகிறோம்.

# சடலம் அடையாளம் காணப்பட்டது

(நமது நிருபர்)

சித்தாண்டியில் வெள்ளிமாலை சுட்டுக்கொல்லப்பட்ட நபர் அடையாளம் காணப்பட்டுள்ளார். வந்தாறுமூலையைச் சேர்ந்த இரு குழந்தைகளின் தந்தையான கே. வீரப்பன் என அவரது மனைவி தெரிவித்துள்ளார். மேற்படி நபரின் சடலம் அவரது மனைவியால் நேற்று மாலை பொறுப்பேற்கப்பட்டது. மாமாங்கத் தீர்த்தோற்சவத்திற்கு காலம் சென்ற கணவர் சென்றதாக மரண விசாரணையில் தெரிவித்துள்ளார்.

# நாளை இடம் பெறும்

மகாஜனக் கல்லூரியில் இன்று நடை பெறுவதாக அறிவிக்கப் பட்டிருந்த கருத்தரங்கு நாளை நடைபெறும் என அறிவிக்கப் பட்டுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை வே... வொயிஸ் பப்ளிகேஷன் நிறுவனத்தினால் ... கிராபிக்ஸ் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.